தினமணி

இன்றைய வேளாண் செய்திகள்

## செய்யூரில் 52 மி.மீ. மழை

காஞ்சிபுரம் மாவட்டம், செய்யூரில் திங்கள்கிழமை இரவு அதிகபட்சமாக 52 மி.மீ. மழை பெய்தது.காஞ்சிபுரம் மாவட்டத்தில் காஞ்சிபுரம், செய்யூர் உள்ளிட்ட அனைத்துப் பகுதிகளிலும் திங்கள்கிழமை இரவு 7 மணிக்கு மேல் மழை கொட்டி தீர்த்தது. இதனால் சாலைகளில் மழைநீர் வெள்ளமாக ஓடியது. சாலைகளில் ஒரு சில இடங்களில் முழங்கால் அளவுக்கு தண்ணீர் தேங்கி நின்றது. இந்த நிலையில் செவ்வாய்க்கிழமை காலை நிலவரப்படி மாவட்டத்தில் செய்யூரில் அதிகபட்சமாக 52 மி.மீ. மழை பதிவானது. மாவட்டத்தில் பிறப் பகுதிகளில் பெய்த மழை அளவு (மில்லி மீட்டரில்) ஸ்ரீபெரும்புதூர், 42.40, காஞ்சிபுரம் 39, கேளம்பாக்கம் 22.60, தாம்பரம் 16.40, உத்தரமேரூர், செங்கல்பட்டு 11, திருக்கழுகுன்றம் 6, மதுராந்தகம் 5, மாமல்லபுரம் 3.60.

## விவசாயிகள் நடைபயணம்

காவிரி, வைகை இணைப்புத் திட்டத்திற்கு நிதி ஒதுக்கி பணிகளை துவக்கிடக் கோரி திருச்சுழியில் தமிழ்நாடு விவசாய சங்கத்தினர் நடைபயணம் மேற்கொண்டனர். விருதுநகர் மாவட்டத்தில் சில ஆண்டுகளாக மழை இல்லாமல் விவசாயம் மிகவும் பாதிக்கப்பட்டுள்ளது. விளை நிலங்கள் வீட்டடி மனைகளாக மாற்றப்பட்டு வருகின்றன. மேலும், குண்டாறு பகுதியில் அதிகளவில் மணல் திருடப்பட்டதால் 10 அடிக்கு மேல் குண்டும் குழியுமாகவும், சீமைகருவேல மரங்கள் அடர்ந்து ஆறு இருக்குமிடமே தெரியாமல் அழிந்து வருகிறது. நதிகள் இணைப்புத் திட்டத்தை நிறைவேற்றகோரியும், குண்டாற்றிலிருந்து திருச்சுழி கண்மாய்களுக்கு நேரடி கால்வாய் அமைக்க வலியுறுத்தியும் விவசாயிகள் சங்கங்கள் பல போராட்டங்களை நடத்தினர். இதன் விளைவாக காவிரி,

வைகை, குண்டாறு இணைப்பு திட்டத்தை செயல்படுத்துவதற்கான வரைபடம் தயாரிக்கப்பட்டு 1997-ஆம் ஆண்டு வழங்கப்பட்டது. ஆனால் அதன்பின் தொடர் நடவடிக்கைகள் இல்லை. தமிழக அரசு இத்திட்டத்தை உடனடியாக செயல்படுத்தக்கோரி விவசாயிகள் சங்கத்தினர் நடைபயணம் மேற்கொண்டனர். காவிரி, வைகை, குண்டாறுகளை இணைக்கும் போது, வைப்பாறையும் இணைக்க வேண்டுமெனவும், உடனடியாக இத்திட்டத்தை செயல்படுத்த வலியுறுத்தியும் தமிழ்நாடு விவசாய சங்கத்தின் சார்பில் திருச்சுழி அருகே உள்ள கிருஷ்ணா புரத்திலிருந்து பாறைக்குளம், சித்தலைக்குண்டு வழியாக திருச்சுழிக்கு சுமார் 20 கி.மீ., தூரம் நடைபயணமாகச் சென்றனர். தமிழ்நாடு விவசாயிகள் சங்க தாலுகா செயலர் பூமிநாதன், தாலுகா தலைவர் மார்க்கண்டன் தலைமை வகித்தனர். மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் தாலுகா செயலர் அன்புச்செல்வன் துவக்கி வைத்தார். மாவட்டச் செயலர் விஜயமுருகன் நடைபயணத்தை முடித்து வைத்தார்.

## மேட்டூர் அணைக்கு 5 ஆயிரம் கன அடி நீர்வரத்து

மேட்டூர் அணைக்கு நீர்வரத்து செவ்வாய்க்கிழமை காலை நொடிக்கு 5 ஆயிரம் கன அடியாகக் குறைந்தது. காவிரியின் நீர்ப்பிடிப்புப் பகுதிகளில் மழை இல்லாததால், மேட்டூர் அணைக்கு நீர்வரத்து படிப்படியாகக் குறைந்து வருகிறது. இந்த நிலையில், திங்கள்கிழமை காலை அணைக்கு நொடிக்கு 7,694 கன அடியாக இருந்த நீர்வரத்து செவ்வாய்க்கிழமை காலை நொடிக்கு 4,967 கன அடியாகக் குறைந்தது. நீர்வரத்து குறைந்ததால், அணையின் நீர்மட்டம் வேகமாகக் குறைந்து வருகிறது. நீர்மட்டம் செவ்வாய்க்கிழமை காலை 97.92 அடியாக இருந்தது. பாசனத்துக்காக நொடிக்கு 23,900 கன அடி வீதம் தண்ணீர் திறந்துவிடப்படுகிறது. அணையின் நீர்இருப்பு 62.17 டி.எம்.சி.யாக இருந்தது. ஒகேனக்கல் காவிரியாற்றில் திங்கள்கிழமை நொடிக்கு 7 ஆயிரம் கன அடியாக இருந்த நீர்வரத்து, செவ்வாய்க்கிழமை 6 ஆயிரம் கன அடியாகக் குறைந்தது.

## சம்பா சாகுபடி: மேலும் 2640 டன் உரம் திருச்சி வந்தது

திருச்சி உள்ளிட்ட 6 மாவட்டங்களைச் சேர்ந்த விவசாயிகளின் பயன்பாட்டுக்காக மேலும் 2640 டன் உரம் பாரதீப்பிலிருந்து செவ்வாய்க்கிழமை திருச்சி வந்தது. மேட்டூர் அணையிலிருந்து பாசனத்துக்காக ஆகஸ்ட் 10-ம் தேதி தண்ணீர் திறக்கப்பட்ட நிலையில் விவசாயிகள் சம்பா சாகுபடி பணியைத் தொடங்கி, நாற்று நட்டு அடியுரமிடும் பணியை மேற்கொண்டு வருகின்றனர். விவசாயிகளின் பயன்பாட்டுக்காக கடந்த மாதம் 25-ம் தேதி 2643 டன் அடியுரம் வந்து, தொடக்க வேளாண் கூட்டுறவு கடன் சங்கங்களுக்கு அனுப்பி வைக்கப்பட்டது. விவசாயிகளுக்கு தட்டுப்பாடில்லாமல் அடியுரம் வழங்கும் வகையில், ஒடிசா மாநிலம், பாரதீப்பில் உள்ள இப்கோ உரத் தொழிற்சாலையிலிருந்து 1315 டன் டிஏபி உரமும், 1325 டன் இப்கோ 20:20:013 அடியுரமும் சரக்கு ரயில் மூலமாக செவ்வாய்க்கிழமை திருச்சி வந்தது. 6 மாவட்டங்களுக்கு அனுப்பி வைப்பு: திருச்சி வந்துள்ள உரத்தில் மாநில சேமிப்புக் கிடங்கில் 700 டன் இருப்பு வைத்ததுபோக, மீதமுள்ள 1940 டன் உரம் திருச்சி, பெரம்பலூர், கரூர், அரியலூர், தஞ்சாவூர் மற்றும் புதுக்கோட்டை மாவட்டங்களிலுள்ள தொடக்க வேளாண் கூட்டுறவு கடன் சங்கங்களுக்கு அனுப்பி வைக்கப்பட்டு, அங்கிருந்து விவசாயிகளுக்கு வழங்கப்படும். இதுவரை 5283 டன் அடியுரம் வந்துள்ளது. இதைத் தொடர்ந்து, விவசாயிகளின் பயன்பாட்டுக்குத் தேவைப்படும் யூரியா இன்னும் 15 நாள்களுக்குள் திருச்சி வந்து சேரும். அவை பின்னர் விவசாயிகளின் பயன்பாடுக்காக அனுப்பி வைக்கப்படும் என்று இப்கோ கள அலுவலர் சுரேஷ் தெரிவித்தார்.

## மக்காச்சோளப் பயிருக்கு நுண்ணுயிர்க் காரணி தெளிக்க வேண்டும்

பெரம்பலூர் மாவட்டத்தில் சாகுபடி செய்துள்ள மக்காச் சோளப் பயிருக்கு நுண்ணுயிர்க் காரணி தெளிக்க வேண்டும் என்றார் வேளாண் இணை இயக்குநர் வே. அழகிரிசாமி. இதுகுறித்து அவர் செவ்வாய்க்கிழமை

வெளியிட்ட செய்திக் குறிப்பு: பெரம்பலூர் மாவட்டத்தில் பருத்தி மற்றும் மக்காச்சோளம் விதைப்பு செய்யப்பட்டு, தற்போது 30 முதல் 35 நாள் பயிராக உள்ளது. மழை இல்லாததால் சரளை மண் நிலப்பகுதியில் சாகுபடி செய்யப்பட்ட மக்காச் சோளப் பயிர்கள் வாடும் தருவாயில் உள்ளன. மண்ணில் ஈரப்பதம் குறைந்து கடுமையான வெப்பம் நிலவுவதால், பயிர்களுக்கு 200 மி.லி. நுண்ணுயிர்க் காரணியை 200 லிட்டர் தண்ணீரில் கலந்து, கைத்தெளிப்பான் மூலம் இலைகள் நன்றாக நனையும்படி காலை வேளையில் தெளிக்க வேண்டும்.இதனால் பயிர்கள் வாடும் நிலையிலிருந்து தெளிந்துவிடும். இந்த நுண்ணுயிர்க் காரணி வேப்பந்தட்டை பருத்தி ஆராய்ச்சி நிலையத்தில் விநியோகத்திற்கு உள்ளது. மேலும், தற்போது நிலவும் தட்ப வெட்ப நிலையில் பருத்தியில் இலைப்பேன் மற்றும் தத்துப்பூச்சி தாக்குதலுக்குள்ளாக வாய்ப்பு உள்ளது. அதை கட்டுப்படுத்த தையோமீத்தாக்சம் (ஆக்ட்ரா) 25 டபிள்யூ ஜி ஏக்கருக்கு 200 கிராம் அல்லது, பிப்ரோனில் (ரீஜெண்ட்) 5 எஸ்.சி ஏக்கருக்கு 600 மி.லிட்டருடன் ஏதாவது ஒரு ஒட்டும் திரவம் (5 மி.லி டேங்க்) வயலில் தேவையான அளவு ஈரப்பதம் இருக்கும்போது தெளித்து கட்டுப்படுத்தலாம்.

## கரும்பு விவசாயிகளுக்கு பாக்கித் தொகை வழங்காத சர்க்கரை ஆலைகள் மீது நடவடிக்கை: அமைச்சர் மகாதேவபிரசாத்

கரும்பு விவசாயிகளுக்கு பாக்கித் தொகையை வழங்காத சர்க்கரை ஆலைகள் மீது கடும் நடவடிக்கை எடுக்கப்படும் என்று, கர்நாடக கூட்டுறவுத் துறை அமைச்சர் எச்.எஸ்.மகாதேவபிரசாத் தெரிவித்தார். இதுகுறித்து பெங்களூருவில் செவ்வாய்க்கிழமை செய்தியாளர்களிடம் கூறியது: கடந்த ஆண்டு பெல்காமில் குளிர்கால சட்டப்பேரவைக் கூட்டத்தொடர் நடந்தபோது, டன் கரும்புக்கு ரூ. 2,500 ஆதரவு விலை நிர்ணயம் செய்யப்பட்டது. இதன் அடிப்படையில் ஒரு சில சர்க்கரை ஆலைகள் கரும்பு விவசாயிகளிடம் கரும்பை கொள்முதல் செய்கின்றனர். ஒரு சில ஆலை உரிமையாளர்கள் கரும்பு விவசாயிகளுக்கு பாக்கித் தொகை வைத்துள்ளதாகப் புகார்கள் தெரிவிக்கப்பட்டது. இதையடுத்து பாக்கித் தொகை வைத்துள்ள சர்க்கரை

ஆலைகளுக்கு நோட்டீஸ் அனுப்பப்பட்டது. இதன் பின்னர் ஒரு சில ஆலைகளைத் தவிர மற்றவர்கள் விவசாயிகளுக்கு பாக்கித் தொகையை வழங்கி உள்ளதாகத் தெரிவித்தனர். பாக்கித் தொகை வழங்காத ஆலை உரிமையாளர்கள் மீது கடும் நடவடிக்கை எடுக்கப்படும். விரைவில் கரும்பை கொள்முதல் செய்வது தொடர்பான சட்ட மசோதா திருத்தம் செய்யப்படும். இதனால் கரும்பு விவசாயிகள் பயனடைவார்கள் என்றார்.

மேலும், சாம்ராஜ்நகர் மாவட்டத்தில் உள்ள மாதேஸ்வரன் கோயில் நிர்வாகத்திற்கு ஆணையம் அமைக்க ஆளுநர் ஒப்புதல் அளித்துள்ளார். ஆண்டுக்கு ரூ.18 கோடி வரை வருவாய் கிடைக்கும் மாதேஸ்வரன் கோயிலின் நிர்வாகத்திற்கு ஆணையம் அமைப்பதன் மூலம் சிறப்பான வளர்ச்சியடைய முடியும். கோயிலின் அருகில் உள்ள கிராமங்களும் இதனால் பயனடையும் என்றார் அவர்.

# தினமலர்

இன்றைய வேளாண் செய்திகள்

**தொடர் மழை : விவசாயிகள் மகிழ்ச்சி**

காஞ்சிபுரம் : காஞ்சிபுரம் மாவட்டத்தில், நேற்று முன்தினம் இரவு பரவலாக மழை பெய்தது. இதில், அதிகபட்சமாக செய்யூரில் 52 மி.மீ., மழை பெய்துள்ளது. காஞ்சிபுரம் மாவட்டத்தில், கடந்த இரண்டு ஆண்டுகளாக பருவ மழை பொய்த்து போனதால், விவசாயம் பாதிக்கப்பட்டது. தென்மேற்கு பருவமழை மற்றும் வளி மண்டலத்தில் காற்று சுழற்சி காரணமாக, மாவட்டத்தில், கடந்த சில நாட்களாக இரவு நேரத்தில் பலத்த மழை பெய்து வருகிறது; நேற்று முன்தினம் இரவும் மாவட்டத்தின் பல பகுதிகளிலும் மழை பெய்தது. இந்த மழையால் விவசாயிகளும், கிராமவாசிகளும் மகிழ்ச்சி அடைந்துள்ளனர்.நேற்று முன்தினம், மாவட்டத்தில் பல்வேறு இடங்களில் பெய்த மழை அளவு (மில்லி மீட்டரில்)வருமாறு:

செய்யூர் 52

ஸ்ரீபெரும்புதுõர் 42

காஞ்சிபுரம் 39

கேளம்பாக்கம் 22.6

தாம்பரம் 16

உத்திரமேரூர் 11

செங்கல்பட்டு 11

திருக்கழுக்குன்றம் 6

மதுராந்தகம் 5

மாமல்லபுரம் 3.6

## <u>சம்பா பட்ட நாற்று நடவு துவக்கம்</u>


திருக்கழுக்குன்றம் : காஞ்சிபுரம் மாவட்டத்தில் பரவலாக மழை பொழிந்து வருவதால், ஆற்றங்கரையோர கிணற்று பாசன விவசாயிகள், சம்பா பட்டத்தில், நெல் நாற்று நடவு செய்யும் பணியை துவங்கியுள்ளனர். காஞ்சிபுரம் மாவட்டத்தில் இந்த ஆண்டு, போதிய அளவு மழை பொழியாததால், பெரும்பாலான விவசாயிகள் நாற்றுவிடும் பணியை கூட துவங்காமல் இருந்தனர். சம்பா பட்டத்தில் ஆகஸ்ட், செப்டம்பர் மாதங்களில் நாற்றுவிட்டு நடவு செய்வது வழக்கம். தற்போது தென்மேற்கு பருவ மழை, மாவட்டத்தில் தீவிரமடைந்துள்ளதால், திருக்கழுக்குன்றம் ஒன்றியம் பாலாற்றங் கரையோரத்திலுள்ள மணப்பாக்கம், உதயம்பாக்கம், பாண்டூர் கிராமத்தில் கிணற்று பாசன விவசாயிகள், சிலர் தற்போது பரவலாக மழை பொழிந்து வருவதால், நாற்று நட துவங்கியுள்ளனர். இதுகுறித்து வேளாண்மை துறை உதவி இயக்குனர் ஒருவர் கூறுகையில், ""தற்போது, விவசாயிகளுக்கு தேவையான விதை நெல், கிடங்கில் இருப்பு உள்ளது. விவசாயிகளை ஊக்குவிக்க, இயந்திரம் மூலம் நடவு செய்யும் விவசாயிகளுக்கு, ஏக்கருக்கு 600 ரூபாய் மானியமாக வழங்கப்படும். விவசாயிகள் நடவு

செய்யும் போது எடுக்கப்பட்ட புகைப்படத்துடன் விண்ணப்பித்து மானியம் பெறலாம்,"" என்றார்.

**<u>உதவி வேளாண் அலுவலர் சங்க நிர்வாகிகள் தேர்வு</u>**

திருவள்ளூர் : தோட்டக்கலை உதவி வேளாண்மை அலுவலர் சங்க நிர்வாகிகள் தேர்தல் நேற்று முன்தினம் நடந்தது. திருவள்ளூர் மாவட்ட தோட்டக்கலைத் துறை உதவி வேளாண்மை அலுவலர்கள் சங்க தேர்தல், மாநில துணை தலைவர் சுரேஷ், பொருளாளர் பெருமாள் தலைமையில், நேற்று முன்தினம் நடந்தது. இதில், திருவள்ளூர் மாவட்ட தலைவராக நம்பிராஜன், துணை தலைவராக சிவானந்தம், செயலராக சின்னசாமியும் தேர்வு செய்யப்பட்டனர். மேலும் பொருளாளராக, பிரபாகரன், இணை செயலர் ராஜேஷ் ஆகியோரும் தேர்ந்தெடுக்கப்பட்டனர்.

**<u>பழத்தோட்டமான செம்மண் தரிசு நிலம்</u>**



கேரள மாநிலம் கொச்சியை சேர்ந்தவர் குரியன்ஜோசப், 50. பி.ஏ., பட்டதாரியான இவர், தேனி மாவட்டம் லோயர்கேம்ப்பில் மேற்கு தொடர்ச்சி மலை அடிவாரத்தில் ஐந்து ஆண்டுகளுக்கு முன் 35 ஏக்கர் செம்மண் தரிசு நிலத்தை வாங்கினார். மெயின் ரோட்டில் இருந்து இங்கு செல்லவே 5 கி.மீ., நடக்க வேண்டும். மலையடிவாரத்தின் முதல் நிலம் இதுதான். ரசாயன கலப்பு இல்லாமல், இயற்கை முறையில் பழங்கள் சாகுபடி செய்து உலக மார்க்கெட்டில் விற்பனை செய்வதே இவரது லட்சியம். இதற்காகவே இவர், ரசாயனம் எந்த வகையிலும்

எட்டிப்பார்க்காத நிலத்தை தேர்வு செய்தார். அந்த நிலம் கடினமான கற்கள் நிறைந்த செம்மண் பூமியாக இருந்தது. அதனை பற்றி கவலைப்படவில்லை. எளிதாக கிடைத்த சான்று: அங்கு ""ஹார்வஸ்ட் பிரஷ்" என பெயரிட்டு பழப்பண்ணை அமைத்தார். முதலில் மாதுளை கன்றுகளை வளர்த்தார். உரமிட இப்பகுதியில் உள்ள இலை, தழைகளை மட்டும் பயன்படுத்தினார். மாடுகளின் சாணத்தை மட்டுமே உரமாக இட்டார். மாடுகளுக்கு வழங்கும் உணவில் கூட ரசாயனம் கலந்து விடக்கூடாது என்பதில் கவனமாக இருந்ததால் இவரது பழ உற்பத்திக்கு உலகளவிலான "ஆர்கானிக் சான்று' எளிதாக கிடைத்து விட்டது. ஐ.எஸ்.ஓ., சான்றும் கிடைத்து விட்டது. இதனால் அடுத்து பப்பாளி, மா, பலா, திராட்சை, முருங்கை, சப்போட்டா, எலுமிச்சை, தென்னை சாகுபடி செய்தார். **குவியும் ஆர்டர்கள்:** எல்லாவற்றிற்குமே சொட்டுநீர் பாசன முறையில் நீர்ப் பாசனம் செய்தார். அதேபோல் வளமான, மாசற்ற இயற்கை கொடுத்த வரத்தால் விளைச்சல் நன்றாக உள்ளது. பழங்களின் நிறமும் சுவையும் உலகில் முன்னணி இடத்திற்கு போட்டியிடும் திறனை பெற்று விட்டன. எனவே உலகில் பல்வேறு நாடுகளில் இருந்தும் இவரிடம் பழங்கள் வாங்க ஆர்டர்கள் குவிந்தன.

**அழகிய பண்ணை**: வெளிநாடுகளில் இருந்து இவரது பண்ணைக்கு நேரடியாக ஆய்வாளர்கள் வரத்தொடங்கினர். இதனால் பண்ணையை அழகுற அமைத்தார். "ஹார்வஸ்ட் பிரஷ்' என்ற பெயருக்கு ஏற்ப பண்ணையில் இயற்கை உரம் தயாரிப்பது, தங்கும் குடில்கள், பணியாளர்கள் குடில்கள், விருந்தினர் குடில்கள், வாத்து, நாட்டுக்கோழி, நவீன மாட்டுப்பண்ணை, நேர்த்தியான ரோடுகள், மாட்டு வண்டி என எல்லாமே கேரள ஸ்டைலில் வடிவமைக்கார். இன்று தென்மாநிலங்களில் முன்னணி சூப்பர் மார்க்கெட்டுகளுக்கு இங்கிருந்து பழங்கள் பேக்கிங் செய்யப்பட்டு அனுப்பி வைக்கப்படுகின்றன. வெளிநாடுகளுக்கும் பழங்கள் செல்கின்றன.

**மாதுளை தேன்:** இங்கு மற்றொரு சிறப்பம்சம் மாதுளை தேன். நிலத்தில் 90 சதவீதம் மாதுளை சாகுபடி செய்திருப்பதால், நூற்றுக்கணக்கான தேன்பெட்டிகள் வைத்து மாதுளை தேன் சேகரிக்கிறார். இயற்கையாக விளைந்த மாதுளை என்பதாலும், மாதுளை தேன் என்பதாலும் உலக

மார்க்கெட்டில் தனி மவுசு உள்ளது. இதனால் அடுத்த பல ஆண்டுகளுக்கு கூட மாதுளை தேவைக்கு முன்பதிவு உள்ளது. கேட்ட பணம் கொடுத்து முன் பதிவு செய்துள்ளது எல்லாமே பன்னாட்டு நிறுவனங்கள் என்பது முக்கிய அம்சம்.

**பாதுகாப்பு ஏற்பாடு:** இங்குள்ள ஒரே பிரச்னை பழங்கள் மற்றும் பணியாளர்கள் பாதுகாப்பு. அடர்ந்த மலையடிவாரம் என்பதால் காட்டு பன்றிகள், யானை, காட்டு மாடுகள் உட்பட வனவிலங்குகள் தொல்லை அதிகம். எனவே பண்ணையை சுற்றி பாதுகாப்பாக வேலி அமைத்துள்ளார். வெளிமார்க்கெட்டில் எவ்வளவு விலை கிடைத்தாலும், உள்ளூர் வியாபாரிகளுக்கு குறைந்த விலையில் பழங்களை வழங்கி வருகிறார். கம்பம், கூடலூர், லோயர்கேம்ப் பகுதி மக்களுக்கும் இயற்கை முறையில் விளைவிக்கப்பட்ட உலகத்தரம் வாய்ந்த மாதுளை சில்லரை மார்க்கெட்டில் தெரு வியாபாரிகள் மூலம் கிடைத்து வருவது இதில் மிகவும் சிறப்பான அம்சம். குரியன் ஜோசப் கூறியதாவது: "நன்மை விதைத்து, நல்லதை அறுவடை செய்" என்று கேரளாவில் கூறுவார்கள். நான் மண்ணை கெடுத்து அதிக லாபம் சம்பாதிக்க விரும்பவில்லை. மாறாக மண்ணை வளப்படுத்தி, நிறைவான விளைச்சல் எடுக்க விரும்பினேன். நமது பழங்களை தரமாக மாசற்ற வகையில் உற்பத்தி செய்து வென்றுள்ளேன்.அடுத்த கட்டமாக, இயற்கை குறித்த விழிப்புணர்வுக்காக இந்த இடத்தில் பண்ணை சுற்றுலா அமைக்க திட்டமிட்டுள்ளேன். வருபவர்களை இங்கேயே தங்க வைத்து, பண்ணையை நேரடியாக பார்வையிட்டு, பழங்களை பறித்து சாப்பிட்டு செல்லும் வகையில் ஏற்பாடு செய்ய உள்ளேன். இவ்வாறு கூறினார்.

**தொடர்புக்கு:** 919388610249 www.harvestfresh.in, info@harvestfresh.in

**-எம்.பாண்டியராஜன்**

<u>***சின்ன சின்ன செய்திகள்***</u>






**இலவங்கப்பட்டை உரிக்கும் கத்தி :** நம் நாட்டின் பழமையான மணமூட்டும் பயிர்களில் இலவங்கப் பட்டையும் ஒன்றாகும். தமிழ்நாட்டில் கீழ்பழனி மலைப்பகுதி, கல்லார், பர்லியான், குற்றாலம், ஏற்காடு மலைப்பகுதிகளில் இலவங்கப்பட்டை பயிர் செய்யப்படுகிறது. இம்மரத்தின் பட்டைகளை உரித்து எடுப்பதற்கு தோட்டக்கலை ஆராய்ச்சி நிலையம், தடியன்குடிசையில் வடிவமைக்கப்பட்டது. "பட்டை உரிக்கும் கத்தி" இதனைக் கொண்டு முதல் தரமான மெல்லிய சிறிய குழல் வடிவில் அமைந்த பட்டைகள் "குழல்கள்" எனவும் பட்டையின் உட்புறம் காணப்படும் மென்மையான பகுதி "சருகு' எனவும், முதிர்ந்த தண்டுகளில் சுரண்டப்பட்டு, ஆனால் உரிக்காமல் பெறப்பட்ட பட்டைகளைச் ""சுரண்டப்பட்ட சீவல்" எனவும், பட்டை சுரண்டப்பட்டு வெளிப்பட்டை நீக்கப்படாமல் பெறப்பட்ட பட்டைகளை "சுரண்டப்படாத சீவல்கள்' எனவும் தரம் பிரிக்க உதவுகிறது. மேலும் மேற்கூறிய அனைத்து இரகப்பட்டைகளிலிருந்து இலவங்கப்பட்டை தூளும் பெறப்படுகிறது. தகவல்: தோட்டக்கலை ஆராய்ச்சி நிலையம், தடியன்குடிசை.

**கவாத்து செய்த பழமரங்களில் போட்டோ பசை பூசுதல் :** பழ மரங்களை ஒவ்வொரு ஆண்டும் ஒருமுறை கவாத்து செய்வது முக்கியம். கவாத்து செய்த மரங்களை போட்டோ மிக்சர் என்ற பூசனக்கொல்லி மருந்தை பசைபோல் தயாரித்து கவாத்து செய்த இடங்களில் பூசுவதால் நோய் கிருமிகள் தாக்காமல் பழமரங்கள் பாதுகாக்கப்படுகின்றன. 10 சதவீத போட்டோ பசை தயாரிக்க 1 கிலோ காப்பர் சல்பேட் பவுடருடன் 1 கிலோ சுண்ணாம்பு பவுடரை 10 லிட்டர் தண்ணீருடன் கலந்து கட்டியான பசைபோல் தயாரிக்க வேண்டும். இப்பசையைக் கவாத்து செய்தவுடன் காயம்பட்ட இடங்களில் பூச வேண்டியது அவசியம்.

**கவனிக்க வேண்டியவை :** காப்பர் சல்பேட் கலவையைச் சுண்ணாம்பு பவுடருடன் கலக்கல் அவசியம். மாற்றிக் கலக்கக் கூடாது. இக்கலவையை மண்சட்டி அல்லது மரச்சாமான் அல்லது பிளாஸ்டிக் பாத்திரங்களில் வைத்து தான் தயாரிக்க வேண்டும். இரும்பு பாத்திரங்களில் தயாரிக்கக் கூடாது. இக்கலவை தேவைப்படும் பொழுது மட்டும் தயாரித்தல் அவசியமானது. **தகவல் :** மண்டல ஆராய்ச்சி நிலையம், அருப்புக்கோட்டை.

**நானோ துகள் தொழில்நுட்பம் :** அனுபவ விவசாயி ஆ.ராஜமனோகரன், த/பெ.ஆரிச்சாமி, மாணவத்தோட்டம், பூலுவாப்பட்டி அஞ்சல், ஆலந்துறை, கோயம்புத்தூர்-641 101, மொபைல்: 90034 94705, தன்னுடைய தோட்டத்தில் தென்னை, தக்காளி, வாழை போன்ற எல்லா பயிர்களுக்கும் புரோபசர் ராஜசேகரன் விநியோகித்த நானோ தொழில்நுட்பக் கரைசலை பயன்படுத்தியுள்ளார். வாடல்நோய் தாக்கப்பட்ட தென்னை மரத்தில் குறைந்த பட்சம் 4-5 குருத்தாவது மிஞ்சியிருக்கும் நிலையில் நானோ கரைசல் தெளிக்கப்பட்டால், நிலத்தில் இடப்பட்டால், தென்னை வாடல் நோயிலிருந்துமீட்கப்படுகிறது. நானோ தெளிப்பிற்கு பிறகு குரும்பை உதிர்வது குறைகிறது. செம்பொன் சிலந்தி தாக்குதல் தவிர்க்கப்படுகிறது. மேலும் விவரங்களுக்கு புரோபசர் பி.ராஜசேகரன் B.Tech., MBA., Chairman and Managing Director, Innovative Nano Bio Tech Formulations, பழைய எண்.34/1, புதிய எண்.73/1, 7வது அவென்யூ, அசோக் நகர், சென்னை-600 083. அலைபேசி:9380954559.மல்லிகை, சம்பங்கியில் மலர்கள் உற்பத்தி

அதிகரிக்க "கும்கி' தெளிப்பு சிபாரிசு செய்யப்படுகிறது. அனுபவ விவசாயி ""திரு.கா.கமலசேகர், த/பெ.காடசாமி கவுண்டர், சம்பங்கி தோட்டம், தியாகனூர் அஞ்சல், ஆத்தூர் வட்டம்-636 101. மொபைல் : 94878 61032, Manufacturer & Distributor, Crop Health Associate Corporator, Chennai 600 064. மொபைல்: 86954 53003, மற்றும் ஸ்ரீதர் அக்ரோ மார்க்கெட்டர்ஸ், திண்டுக்கல். 98421 42335 / 98421 32131. ஈரோடு அக்ரோ கார்ப்பரேஷன், 90470 07275 / 90470 17276.

**- டாக்டர் கு.சௌந்தரபாண்டியன்.**

## மிளகாய் சாகுபடியில் அறுவடை பின் செய்நேர்த்தி



மிளகாய் வற்றலின் கூடுதல் விலை வற்றலின் சிவப்பு நிறத்தன்மை மற்றும் காரத்தன்மையைப் பொறுத்தே அமைகிறது. வற்றல் "சிறப்புத்தரம்" "நடுத்தரம்" மற்றும் "பொதுத்தரம்" என மூன்று தரங்களாகப் பிரிக்கப்படுகிறது. தரமான சிவப்பு நிறம் உள்ள வற்றலைப் பெற்றிட விவசாயிகள் மேற்கொள்ள வேண்டிய அறுவடை பின் செய்நேர்த்தி முறைகள் பின்வருமாறு. மிளகாய் தோட்டத்தில் பழம் அழுகல் நோயை பூஞ்சாணக் கொல்லிகள் தெளித்துக் கட்டுப்படுத்த வேண்டும். காய்கள், ஹீலி யாத்திஸ் மற்றும் புருடீனியா புழுக்களால் தாக்கப்பட்டால் ஒருங் கிணைந்த பயிர் பாதுகாப்பு முறைகள் மேற்கொள்ள வேண்டும். சிபாரிசுப்படி பொட்டாஷ் உரமிடுவதால் காய்களின் நல்ல நிறமும் காரத்தன்மையும் அதிகரிக்கிறது. மிளகாய்ச் செடியில் பழங்கள் முழுவதும் சிவப்பு நிறமாக மாறியவுடன் பழங்களைப் பறிக்கலாம். மிளகாய்ப் பழங்களைக் காம்புடன் பறிக்க வேண்டும். பழங்களைப் பறித்த அன்றே காயப்போட வேண்டும். மணல்

பரப்பிய களங்களில் பழங்களைப் பரப்பி உலரவிட வேண்டும். மிளகாய் பழங்களை மிதமான வெப்பநிலையில் காலையிலும், மாலையிலும் நான்கு நாட்கள் காயப்போட வேண்டும். நன்கு உலர்த்திய மிளகாய் வற்றலிலிருந்து காய்ப்புழு தாக்கிய மற்றும் பழம் அழுகல் நோய் தாக்கிய, நிறம் மாறிய சண்டு வற்றல் மேலும் உடைந்த மிளகாய் வற்றலை நீக்கி நல்ல வற்றலைப் பிரித்து எடுக்க வேண்டும். அறையின் ஈரம் மிளகாய்ப் பழங்களைத் தாக்காமல் இருக்க தரையின் மேல் மணல் பரப்பி அதன் மேல் சேமிக்க வேண்டும். இரவில் மிளகாய்ப் பழங்கள் பனியால் பாதிக்கப்படாமல் இருக்க பழங்கள் மீது லேசான படுதாப் போட்டு மூடி வைக்கலாம். மிளகாய் வற்றல் சிவப்பு நிறமாக இருக்கும்படி கவனித்துக் கொள்ள வேண்டும். தவறான சேமிப்பு முறையில் வற்றல் கருப்பு நிறமாக மாறினால் இவற்றை நல்ல விலைக்கு விற்க முடியாது. மிளகாய் வற்றலை சந்தைக்கு கொண்டு செல்லும்போது சாக்கில் அமுக்காமல் அள்ளி வைத்து வற்றல் உடைந்து விடாமல் கொண்டு செல்ல வேண்டும்.
**- முனைவர்கள் கி.இராமகிருஷ்ணன், வி.கு.பால்பாண்டி, இரா.கார்த்திக் மண்டல ஆராய்ச்சி நிலையம், கோவிலாங்குளம், அருப்புக்கோட்டை.**

## <u>கீழ்மாவிலங்கை ஊராட்சியில் கால்நடை மருத்துவ முகாம்</u>

திண்டிவனம்: திண்டிவனம் வட்டம் ஒலக்கூர் ஒன்றியம் கீழ்மாவிலங்கை ஊராட்சியில் இரு நாட்கள் கால்நடை மருத்துவ முகாம் நடந்தது. ஊராட்சி தலைவர் தங்கமணி தலைமை தாங்கி துவக்கி வைத்தார். தாதாபுரம் கால்நடை மருத்துவ மனை மூலம், நடமாடும் கால்நடை மருத்துவமனை டாக்டர் ராஜேந்திரன் தலைமையில் டாக்டர்கள் குழுவினர் கால்நடைகளுக்கு சிகிச்சை அளித்தனர். 212 மாடுகளுக்கு கோமாரி நோய் தடுப்பு ஊசியும், 17 மாடுகளுக்கு சினை பாதுகாப்பு ஊசி போட்டனர். ஆய்வாளர் சித்ரா, உதவியாளர் சங்கர், ஊராட்சி செயலர் ராமச்சந்திரன் உள்பட பலர் கலந்து கொண்டனர்.

## <u>காங்., விவசாய பிரிவு நலத்திட்ட உதவிகள்</u>

விழுப்புரம்: காங்., மாவட்ட விவசாய பிரிவு சார்பில் முன்னாள் மத்திய அமைச்சர் சிதம்பரம் பிறந்த நாளையொட்டி நலத் திட்ட உதவிகள்

வழங்கப்பட்டது. விழுப்புரம் கேரடி விநாயகர் கோவிலில் நடந்த விழாவில் விவசாய பிரிவு மாவட்ட தலைவர் ராமச்சந்திரன் தலைமை தாங்கி, ஏழைகளுக்கு இலவ சேலைகள் வழங்கினார். முன்னாள் மாவட்ட தலைவர் சுப்ரமணியன், நிர்வாகிகள் விஸ்வநாதன், வழக்கறிஞர் வீரமுத்து, கோதண்டம், ராஜவேல், பாலகிருஷ்ணன், ராஜமாணிக்கம், புருஷோத்தமன், நடராஜன், சந்திரன், ஜெயராமன், அஞ்சலை செல்வராஜ், யுவராஜ், கலியமூர்த்தி, மூர்த்தி, தமிழ்செல்வி, மணிமேகலை, பாரதி, பானு உட்பட பலர் கலந்து கொண் டனர்.

**மக்காசோளம் வரத்து குறைவு**

சின்னசேலம்: சின்னசேலம் மார்க்கெட் கமிட்டிக்கு நேற்று முன் தினம் 60 மூட்டை மக்காசோளம் வந்தது. அதிக பட்சம் ரூ.1,357க்கும், குறைந்த பட்சம் ரூ.1,327க்கு விலை போனது. கடந்த வாரம் 70 மூட்டை மக்காச் சோளம் ஒரு லட்சத்து 30 ஆயிரம் ரூபாய்க்கு கொள்முதல் செய்யப் பட்டது. கடந்த சில நாட்களாக சின்னசேலம் மார்க்கெட் கமிட்டிக்கு மக்காசோளம் வரத்து குறைந்து காணப்படுகிறது.

**ஆடு வளர்ப்பு குறித்து பயனாளிகளுக்கு பயிற்சி**

சின்னசேலம்: பூண்டி ஊராட்சியில் அரசு சார்பில் ஆடுகள் பெற்ற 41 பயனாளிகளுக்கு ஆடு வளர்ப்பு குறித்த பயிற்சி முகாம் நடந்தது. சின்னசேலம் அரசு கால்நடை மருத்துவமனையில் நடந்த பயிற்சியில் கள்ளக்குறிச்சி கால்நடை பராமரிப்புத்துறை உதவி இயக்குனர் ராஜேந்திரன், சின்னசேலம் கால்நடை மருத்துவர் ஜெயகாந்தி ஆகியோர் ஆடுவளர்ப்பு குறித்து பயனாளிகளுக்கு மூன்று நாள் பயிற்சி அளித்தனர்.

**ஏற்காட்டில் கன மழை 3 கிராம மக்கள் மகிழ்ச்சி**

ஏற்காடு: ஏற்காட்டில், இரவு நேரங்களில் கன மழை பெய்து வருவதால், எட்டு மாதங்களுக்கு பின்னர் கண்ணீர் ஓடுகிறது. ஏற்காட்டில், கடந்த நான்கு நாட்களாக பகல் நேரத்தில் கடுமையான வெயிலின் தாக்கம் காணப்படுகிறது. இரவு நேரமானதும் பலத்த மழை பெய்து வருகிறது. தொடர்ந்து பெய்த மழையால், ஏற்காடு மஞ்சக்குட்டை பகுதியில் உள்ள ஆறானது, மஞ்சக்குட்டை, அசம்பூர், சாலைப்பாறை உள்ளிட்ட

கிராமங்களை கடந்து செல்கிறது. இந்த மழை நீர் கிராம மக்களின் அத்தியாவசிய தேவைக்கு மிகவும் பயனுள்ள வகையில் அமைந்துள்ளது. மஞ்சக்குட்டை ஆறு, எட்டு மாதமாக வற்றிய நிலையில் இருந்தது. தற்போது பெய்த மழையால், ஆற்றில் தண்ணீர் ஓடுகிறது. இதனால், மூன்று கிராமங்களை சேர்ந்த மக்கள் மகிழ்ச்சியில் உள்ளனர். இந்த ஆறு, எஸ்டேட்களின் நடுவில் செல்வதால், காபி, மிளகு, கமலா ஆரஞ்சு, சவுக்குமரம் உள்ளிட்டவை நன்கு வளர வாய்ப்புள்ளது.

## வெள்ளாடு வளர்ப்பில் நவீன உத்தி பயிற்சி வகுப்பு

சேலம்: சேலம் கால்நடை மருத்துவமனையில் வெள்ளாடு வளர்ப்பில் நவீன உத்திகள் பற்றிய ஒரு நாள் இலவச பயிற்சி நடந்தது. சேலம், பிரட்ஸ் ரோடு, கலெக்டர் அலுவலகம் அருகில் உள்ள கால்நடை மருத்துவப் பல்கலை பயிற்சி மற்றும் ஆராய்ச்சி மையத்தில், வெள்ளாடு வளர்ப்பில் நவீன உத்தி என்ற தலைப்பில், ஒரு நாள் இலவச பயிற்சி முகாம் நேற்று நடந்தது. இப்பயிற்சி முகாமில், சேலம், நாமக்கல், ஈரோடு, தருமபுரி, விழுப்புரம், கிருஷ்ணகிரி உள்ளிட்ட பகுதிகளில் இருந்து, 58 பேர் கலந்து கொண்டனர். வெள்ளாடு வளர்பது பற்றிய பயிற்சியில், ஆடுகளை தேர்வு செய்யும் முறை, கொட்டகை அமைப்பு, தீவன மேலாண்மை, தீவனம் பயிரிடுதல் மற்றும் நலமேலாண்மை, சந்தைப் படுத்துதலுக்கான வாய்ப்பு பற்றியும், ஆடு வளர்ப்பை நவீன முறையில் செய்து தொழில் முனைவோர் ஆர்வமுடன் பங்கேற்றனர். கால்நடை துறை முன்னால் இணை இயக்குநர் ஜெகத்நாதன் பயிற்சியளித்தார்.

## 2.61 லட்சம் கால்நடைகளுக்கு கோமாரி தடுப்பூசி

நாமக்கல்: நாமக்கல் மாவட்டத்தில், 2.61 லட்சம் கால்நடைகளுக்கு முகாம் மூலமாக, கோமாரி தடுப்பூசி போடப்பட்டுள்ளது. நாமக்கல் மாவட்டத் தில், மூன்று லட்சத்து, 48 ஆயிரம் கால்நடைகளுக்கு, தடுப்பூசி போடு வதற்கான ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது. அதன்படி, மாவட்டம் முழுவதும், 97 கால்நடை மருத்துவர்கள் குழு நியமிக்கப்பட்டு, கடந்த, 1ம் தேதி முதல், தொடர்ந்து 21 நாட்கள் கோமாரி தடுப்பூசிப் போடப்பட்டு

வருகிறது. செப்டம்பர், 21ம் தேதி தடுப்பூசி போடும் பணி நிறைவு பெறுகிறது. கடந்த, 2013 செப்டம்பர் மாதத்தில், 98 சதவீதம் கால்நடைகளுக்கு கோமாரி தடுப்பூசி போடப்பட்டது. அதில், தடுப்பூசி போடாமல் விடுப்பட்ட சில கால்நடைகளுக்கு மட்டுமே, கோமாரி நோய் தாக்குதல் ஏற்பட்டது. அதில், 213 கால்நடைகளுக்கு நோய்க்கான அறிகுறி கண்டுபிடிக்கப்பட்டு, 16 கால்நடை இறந்தது. நடப்பாண்டில், கடந்த மார்ச் மாதம் நடந்த கோமாரி தடுப்பூசி முகாமில், 3.48 லட்சம் கால்நடை களுக்கு தடுப்பூசி போடப்பட்டது. தற்போது வரும், 21ம் தேதி வரை, முகாம் நடக்க உள்ள நிலையில், இரண்டு லட்சத்து, 61 ஆயிரத்து 600 மாடுகளுக்கு, நேற்று முன்தினம் வரை, 75 சதவீதம் கால்நடை களுக்கு தடுப்பூசி போடப்பட்டது. கோமாரி நோய் பாதிப்பை, கால்நடை வளர்ப்போர் உணர்ந்ததால், ஆர்வமுடம் தங்களது கால்நடைக்கு தடுப்பூசி போட்டு வருகின்றனர். இணை இயக்குனர் சக்திவேல் கூறியதாவது: அனைத்து மாடுகளுக்கும், கோமாரி தடுப்பூசி போட தேவையான அனைத்து நடவடிக்கையும் எடுக்கப்பட்டு வருகிறது. சில காரணங்களாக விடுப்பட்ட மாடுகளுக்கு, வரும், 22ம் தேதி முதல், 29ம் தேதி வரை, அந்தந்த கால்நடை மருந்தகத்தில், தடுப்பூசி போடப்படும். கால்நடை வளர்ப்போரிடம் தற்போது, விழிப்புணர்வு அதிகரித்து வருவதால், தடுப்பூசி போட்டு வருகின்றனர். இவ்வாறு அவர் கூறினார்.

## <u>மரவள்ளி கிழங்கு விலை விபரம்</u>

நாமக்கல்: நாமக்கல் வட்ட அளவிலான மரவள்ளிக்கிழங்கு, டன்னுக்கான பாயின்ட் விலையை, வேளாண் வணிக அதிகாரிகள் வெளிட்டுள்ளனர். நாமக்கல் வட்டத்தில் பயிரிடப்படும் முக்கிய தோட்டக்கலை பயிரான மரவள்ளிக்கிழங்கு, விவசாயிடம் இருந்து கொள்முதல் செய்யப்படும் விலை மற்றும் நாமக்கல் வட்ட சேகோ மற்றும் ஜவ்வரிசி உற்பத்தியாளர் சங்கம் சார்பில், பாயின்ட் விலை விபரங்களை தெரிவிக்க வேண்டும் என, விவசாயிகள் தரப்பில் கோரிக்கை விடப்பட்டது. இதையடுத்து, மாவட்ட

கலெக்டர் தட்சிணாமூர்த்தி உத்தரவின்படி, வேளாண் துணை இயக்குனர் (வணிகம்) பரசுராமன், விவசாயியிடம் இருந்து கொள்முதல் செய்யப்படும் விலையை, நாமக்கல் வட்ட சேகோ மற்றும் ஜவ்வரிசி உற்பத்தியாளர் சங்க நிர்ணய விலையை வெளியிட்டுள்ளார். கடந்த, 12ம் தேதி முதல், 14ம் தேதி வரை, கொல்லிமலை கிழங்கு, முள்ளுவாடி கிழங்கு, பச்சமலை கிழங்கு ஆகியவை, டன் ஒன்றுக்கான பாயின்ட் நிர்ணய விலை, தலா, 310 ரூபாய் என, நிர்ணயக்கப்பட்டது.

## <u>தீராம்பாளையத்தில் ரூ.8.80 லட்சத்தில் இலவச ஆடு வழங்கல்</u>

மண்ணச்சநல்லூர்: மண்ணச்சநல்லூர் யூனியனைச் சேர்ந்த தீராம்பாளையம் கிராமத்தைச் சேர்ந்த, 69 பயனாளிகளுக்கு, எட்டு லட்சத்து, 80 ஆயிரம் மதிப்புள்ள விலையில்லா ஆடுகளை அமைச்சர் பூனாட்சி வழங்கினார். கால்நடைத்துறை மாவட்ட இணை இயக்குநர் மோகனரங்கன் தலைமை வகித்தார். தீராம்பாளையம் பஞ்சாயத்து தலைவர் கிரிபால் ஒன்றிய கவுன்சிலர் கதிர்வேல், முன்னிலை வகித்தனர். கதர் மற்றும் கிராமதொழில்கள் துறை அமைச்சர் பூனாட்சி, 69 பயனாளிகளுக்கு, எட்டு லட்சத்து, 80 ஆயிரம் மதிப்பிலான விலையில்லா 276 ஆடுகளை வழங்கினார்.

## <u>வேதாரண்யத்தில் மழை விவசாயிகள் மகிழ்ச்சி</u>

வேதாரண்யம்: நாகை மாவட்டம், வேதாரண்யம் வட்டாரத்தில் பெய்த மழையால், விவசாயிகள் மகிழ்ச்சியடைந்தனர் வேதாரண்யம் மற்றும் சுற்றுவட்டாரப் பகுதியில், வெப்பசலனம் காரணமாக மழை பெய்தது. வேதாரண்யத்தில், 34.4 மி.மீ., தலைஞாயிறு பகுதியில், 9.2 மி.மீ., மழையும் பெய்துள்ளது. இந்த மழை, விவசாயம் மற்றும் கால்நடைகளுக்கு மட்டும் இன்றி சவுக்கு, முந்திரி, மா, போன்ற பயிர்களுக்கும் ஏற்றதாக உள்ளது, என விவசாயிகள் மகிழ்ச்சியடைந்துள்ளனர்.

## நீர்வரத்து ஆய்வு

திண்டுக்கல் : கொடைக்கானல் கீழ்மலை பகுதியில் தொடர் ந்து மழை பெய்வதால், ஆத்தூர் நீர்த்தேக்கத்தின் வரத்து கால்வாய்களை மாநகராட்சி அதிகாரிகள் ஆய்வு செய்தனர். கீழ்மலை பகுதிகளான பன்றிமலை, பண்ணைக்காட்டில் சமீபகாலமாக பலத்த மழை பெய்து வருகிறது. இதனால், ஆத்தூர் நீர்தேக்கத்தின் அளவு அதிகரித்துள்ளதா, வரத்து கால்வாய்களில் பிரச்னை உள்ளதா என மாநகராட்சி உதவி பொறியாளர் மாரியப்பன் தலைமையில், அலுவலர்கள் ஆய்வு செய்தனர். 23.5 அடி கொள்ள ளவு உள்ள நீர்தேக்கத்தில், தற்போது 6.10 அடி தண்ணீர் இருப்பதாக அதிகாரிகள் தெரிவித்தனர்.

## விவசாயிகள் குறைதீர் கூட்டம்

ராமநாதபுரம் : ராமநாதபுரம் கலெக்டர் நந்தகுமார் கூறியதாவது, மாவட்ட விவசாயிகள் குறை தீர் கூட்டம் செப்., 26 காலை 11.30 மணிக்கு, ராமநாதபுரம் கலெக்டர் அலுவலக வளாகத்திலுள்ள ஊராட்சிமன்ற கூட்ட அரங்கில் நடைபெறவுள்ளது. இக்கூட்டத்தில் விவசாயிகள் மற்றும் விவசாய சங்க பிரதிநிதிகள் பங்கேற்று விவசாயம் தொடர்பாக கோரிக்கைகள் குறித்து பேசலாம், என்றார்.

தினகரன்

## இன்றைய வேளாண் செய்திகள்

## தமிழகத்தில் கனத்த மழை: 55 கிமீ வேகத்தில் காற்று வீசும்




சென்னை: வங்கக் கடலில் ஒடிசா அருகே காற்றழுத்தம் உருவாகியுள்ளதால் ஆந்திரா, ராயலசீமா பகுதிகளில் கனமழை பெய்யும். அதைத் தொடர்ந்து தமிழகம் மற்றும் புதுச்சேரியிலும் மழை பெய்யும் என்று சென்னை வானிலை ஆய்வு மையம் தெரிவித்துள்ளது. தமிழகத்தில் வட கிழக்கு பருவமழை தொடங்க இன்னும் 40 நாட்கள் உள்ள நிலையில், தென்மேற்கு பருவமழை தீவிரம் அடைந்துள்ளது. இந்நிலையில் வங்கக் கடலில் வளி மண்டல மேல் அடுக்கில் ஏற்பட்ட காற்று சுழற்சி காரணமாகவும் மழை பெய்து வருகிறது. சென்னையில் நேற்று முன்தினம் இரவு விடிய விடிய பெய்த மழையால் பல இடங்களில் மழை நீர் தேங்கியுள்ள நிலையில் நேற்றும் ஒரு சில இடங்களில் மழை பெய்தது. இந்நிலையில் வங்கக் கடலில் ஒடிசா அருகே புதியதாக ஒரு காற்றழுத்தம் உருவாகியுள்ளது. இதனால், ஆந்திரா, ராயலசீமா பகுதிகளில் இன்று மிக கனமழை பெய்யும். தமிழகத்தில் ஏற்பட்ட வெப்ப சலனம் காரணமாகவும் தமிழகம், புதுச்சேரியில் இன்றும் பரவலாக மழை பெய்யும். தென் மாவட்டங்களில் பலத்த மழைக்கான வாய்ப்புள்ளது.

வட தமிழகத்தில் ஒரு சில இடங்களில் இடியுடன் மழை பெய்யும். மேலும், தென்மேற்கு திசையில் இருந்து மணிக்கு 55 கிமீ வேகத்தில் காற்றும் வீசும். வட தமிழகத்தில் சென்னை, திருவள்ளூர், காஞ்சிபுரம் ஆகிய மாவட்டங்களில் பலத்த காற்றுடன் மாலை, இரவில் பலத்த மழை பெய்யும். மேலும், கடலூர், விழுப்புரம், தஞ்சாவூர், திருவாரூர், நாகப்பட்டினம், புதுக்கோட்டை, திருவண்ணாமலை, வேலூர், தர்மபுரி, சேலம், கோவை, திருப்பூர், ஈரோடு, நீலகிரி, கரூர், பெரம்பலூர், அரியலூர், திருச்சி ஆகிய மாவட்டங்களில் லேசானது முதல் மிதமான மழை பெய்யும் வாய்ப்புள்ளது. கடலோர மாவட்டங்களில் ஒரு சில இடங்களில் கனமழை பெய்யும். பதிவான மழை விவரம் புதுச்சேரி, காஞ்சிபுரம் ஆகிய இடங்களில் 70 மிமீ மழை பெய்துள்ளது. மயிலம், செஞ்சி 60 மிமீ, செய்யார், விழுப்புரம், செம்பரம்பாக்கம், திருத்தணி, வேலூர், எண்ணூர், திண்டிவனம் 50 மிமீ, திருவாலங்காடு, கடலூர், பொன்னேரி, ஸ்ரீபெரும்புதூர், காவேரிப்பாக்கம், பூண்டி, பூந்தமல்லி 40 மிமீ, கொளப்பாக்கம், வந்தவாசி, நெய்வேலி, அண்ணா பல்கலைக் கழகம், சென்னை விமான நிலையம் 30 மிமீ, செங்கம், பண்ருட்டி, டிஜிபி அலுவலகம், கேளம்பாக்கம், மரக்காணம், ஆரணி, விருத்தாசலம், பரமக்குடி, தரமணி, தாமரைப்பாக்கம், திருவள்ளூர், அரக்கோணம், சிவகங்கை, தாம்பரம் 20 மிமீ மழை பெய்துள்ளது.

**<u>தேங்காய் பருப்பு ரூ.18.57 லட்சத்துக்கு ஏலம்</u>**




ஜலகண்டாபுரம்: ஜலகண்டாபுரத்தில் உள்ள வேளாண் உற்பத்தியாளர்கள் கூட்டுறவு விற்பனை சங்கத்தில் 350 மூட்டைகளில்

18,550 கிலோ தேங்காய் பருப்பு விற்பனைக்கு வந்திருந்தது. நேற்று நடந்த ஏலத்தில் 18.5 டன் தேங்காய் பருப்பு ரூ.18.57 லட்சத்திற்கு விற்பனையானது. சென்ற வாரம் குறைந்தபட்சமாக கிலோ ரூ.94க்கும், அதிகபட்சமாக ரூ.105.65க்கும் ஏலம் விடப்பட்டது. இந்த வாரம் குறைந்தபட்சமாக கிலோ ரூ.100க்கும், அதிகபட்சமாக ரூ.106.65க்கும் ஏலம் விடப்பட்டது. இதன்மூலம் ரூ.18.57 லட்சம் வர்த்தகம் நடந்தது. சென்ற வாரத்தை விட இந்த வாரம் சராசரியாக கிலோவுக்கு 1 ரூபாய் அதிகம் கிடைத்ததால் விவசாயிகள் மகிழ்ச்சி.

## <u>தர்மபுரி ஏல அங்காடிக்கு வெண்பட்டு வரத்து அதிகரிப்பு</u>




தர்மபுரி: தர்மபுரி அரசு பட்டுக்கூடு ஏல அங்காடிக்கு வெண்பட்டு வரத்து அதிகரித்துள்ளது. நேற்று 2.40 டன் வெண்பட்டு ஏலத்துக்கு வந்திருந்தது. இந்த மாவட்டத்தில் 2 ஆயிரம் ஏக்கருக்கு மேல் மல்பரி சாகுபடி செய்யப்பட்டுள்ளது. மஞ்சள் பட்டுக்கூடு 280 கிலோ மட்டுமே வந்தது. ஒருகிலோ வெண்பட்டுக்கூடு அதிக பட்சமாக ரூ.433.50க்கு விற்பனையானது. குறைந்த பட்சம் ரூ.300, சராசரி ரூ.395.72க்கு விற்பனையானது. மஞ்சள் பட்டுக்கூடு ஒருகிலோ அதிக பட்சமாக ரூ.340, குறைந்த பட்சம் ரூ.210, சராசரி ரூ.285.58க்கு விற்பனை செய்யப்பட்டது. இந்த மாவட்டத்தில் கடந்த காலங்களில் மஞ்சள் பட்டு உற்பத்தி அதிகளவில் இருந்தது.

## கரும்பு சாகுபடி குறித்து விவசாயிகளுக்கு பயிற்சி

விழுப்புரம், : விழுப்புரம் அருகே உள்ள முண்டியம்பாக்கம் ராஜ்ஸ்ரீ சர்க்கரை ஆலையில் கரும்பு விவசாயிகளுக்கு கரும்பு சாகுபடி குறித்த பயிற்சிக்கான ஒலி, ஒளி அமைப்புகளுடன் கூடிய பேருந்தை விக்கிரவாண்டி உதவி வேளாண்மை இயக்குநர் செல்வபாண்டியன் கலந்து கொண்டு துவக்கி வைத்தார். இத்திட்டத்தின் நோக்கம் விவசாயிகளுக்கு வாகனத்திலேயே வகுப்பறை கொண்டு வருவதாகும். இதில் ஒளிபரப்பப்படும் நவீனகரும்பு சாகுபடி குறித்த தொழிற்நுட்பங்கள் வீடியோ மூலம் விவசாயிகள் பேருந்தில் அமர்ந்தபடியே பார்த்து பயிற்சிபெறும் வகையில் அமைக்கப்பட்டுள்ளது. ராஜ்ஸ்ரீ சர்க்கரை ஆலையின் துணைப் பொது மேலாளர்(விரிவாக்கம்) லட்சுமண் கலந்து கொண்டு நவீன கரும்பு சாகுபடி முறைகள் குறித்து விளக்கிப் பேசி னார். ஆலையின் மூத்த தலைவர்கள் கிருஷ்ணன், கார்த்திகேயன் ஆகியோர் சிறப்புரையாற்றினர். இந்நிகழ்ச்சியில் 50க்கும் மேற்பட்ட விவசாயிகள் கலந்து கொண்டனர்.

## துறையூர் ஒழுங்குமுறை விற்பனை கூடத்தில் நாளை சின்ன வெங்காயம் ஏலம்

திருச்சி, : துறையூர் ஒழுங்குமுறை விற்பனைகூடத்தில் சின்ன வெங்காய மறைமுக ஏலம் நாளை நடைபெறுகிறது. திருச்சி வேளாண் விற்பனை மற்றும் வேளாண் வணிகத்துறை சார்பில் துறையூரில் இயங்கி வரும் ஒழுங்குமுறை விற்பனை கூடத்தில் நாளை காலை 11மணிக்கு சின்ன வெங்காயம் மறைமுக ஏலம் நடைபெற உள்ளது. எனவே திருச்சி மாவட்டம் துறையூர், உப்பிலியபுரம், தா.பேட்டை வட்டாரங்களில் சின்ன வெங்காயம் சாகுபடி செய்து இருப்பில் வைத்துள்ள விவசாயிகள், தங்களிடம் உள்ள சின்ன வெங்காயத்தை துறையூர் ஒழுங்குமுறை விற்பனை கூடத்துக்கு கொண்டு வந்து மறைமுக ஏலத்தில் பங்கேற்கலாம். மேலும், உற்பத்தி செய்த சின்ன வெங்காயத்துக்கு மறைமுக ஏலம் மூலம் நல்ல விலை பெறுவதோடு எந்தவித கமிஷனுமின்றி உடனுக்குடன் பணம் பட்டுவாடா செய்யப்படுவதால்

விவசாயிகள் இதில் பங்கேற்று பயனடையலாம் என வேளாண் விற்பனை மற்றும் வேளாண் வணிகத்துறை துணை இயக்குனர் சந்திரசேகரன் தெரிவித்துள்ளார்.

**தரமான பயறு வகை விதை உற்பத்தி**

பழநி: தரமான பயறுவகை விதைகளை, உற்பத்தி செய்ய விவசாயிகளுக்கு வேளாண்துறை ஆலோசனை வழங்கியுள்ளது. குறைந்த நீர்வளம் உள்ள நிலங்களில், குறுகிய கால பயறு வகைகளான, துவரை, உளுந்து, தட்டை மற்றும் பாசிப்பயறு ஆகியவற்றை பயிர் செய்யலாம். இத்தகைய விவசாயம் மேற்கொள்ளும் விவசாயிகள், தங்களது நிலத்தை நன்கு புழுதியாகும் வரை உழ வேண்டும். கடைசி உழவின்போது 1 எக் டேருக்கு 12.5 டன் மக்கிய தொழு உரம் இட வேண்டும். வேளாண்துறையினரால் சான்றளித்த விதை ரகங்க ளை தேர்வு செய்ய வேண்டும். விதை அளவு மற்றும் இடைவெளிகள் வேளாண்துறையினர் அறிவுறுத்தியபடி இருக்க வேண்டும். விதை நேர்த்திக்கு, 1 கிலோ விதைக்கு, 4 கிராம் டிரைகோடெர்மா விரிடி அல்லது 2 கிராம் கார்பன்டைசிம் என்ற அளவில் கலக்க வேண்டும். கலந்த 24 மணி நேரத்திற்கு பிறகு, 1 எக்டேருக்கு தேவையான 3 பொட்டலம் ரைசோபியத்தை நன்றாக கலந்து, 15 நிமிடம் நிழலில் உலர்த்திய பின்பு விதைக்க வேண்டும். விதையை கடினப்படுத்துவதால் முளைப்புத்திறன் மற்றும் வீரியத்தன்மை அதிகரிக்கின்றது. வறட்சி, அதிக வெப்பம் மற்றும் உவர் மண்ணின் தீமையைத் தாங்கும் திறன் அதிகரிக்கின்றது. பயிர்களில் நீர் சேமிக்கும் தன்மை அதிகரிக்கின்றது. எனவே, விதையை கடினப்படுத்தி, விதை முலாம் பூச வேண்டும். எக்டேருக்கு 5 கிலோ பயறு வகைகளுக்கு, நுண்சத்தினை அடியுரமாக இட வேண்டும். 1 எக்டேருக்கு தேவையான விதையுடன், 3 பொட்டலம் ரைசோபியம், 3 பாக்கெட் பாஸ்போபாக்டீரியா கலந்து விதைநேர்த்தி செய்து விதைக்க வேண்டும். எக்டேருக்கு 10 பொட்டலம் ரைசோபியம் (பயறு) மற்றும் 10 பொட்டலம் பாஸ்போ பாக்டீரியா இட வேண்டும். மானாவாரியில் எக்டேருக்கு 12.5:25:12.5 கிலோ என்ற அளவில் தழை,

மணி, சாம்பல் இட வேண்டும். இறவையில் எக்டேருக்கு 50: 25:25 கிலோ என்ற அளவில் தழை, மணி, சாம்பல் இட வேண்டும். எக்டேருக்கு 110 கிலோ ஜிப்சம் இடுவதால் காய்கள் திரட்சியாக இருக்கும். பென்டிமெதிலின் களைக்கொல்லி எக்டேருக்கு 2 லிட்டர் வீதம் 900 லிட்டர் தண்ணீரில் கரைத்து விதைத்த 3 நாட்களுக்குள் ஈரத்துடன் தெளிக்க வேண்டும். விதைத்த 5ம் நாள் முளைக்காத இடங்களில் ஊறவைத்த விதையை இடைநிறைவு செய்ய வேண்டும். வேளாண்துறை வழிகாட்டல்படி, உரமிடுதல் மற்றும் டிஏபி கரைசல் தெ ளிக்க வேண்டும். பூச்சிநோய் தாக்குதல், நுண்ணுட்டச்சத்து பற்றாக்குறை, கடு மையான வறட்சி, அதிக மான ஈரப்பதம் போன்ற காரணங்களால் பயறு வகைகளில் பூக்கள் உதிர்கின்றன. இதனால் மகசூல் பெருமளவு பாதிக்கப்படுகின்றன. இதனை பயிர் ஊக்கி யான நாப்தலின் அசிடிக் ஆசிட் கொண்டு கட்டுப்படுத்தலாம். பயிர் ஊக் கியினை தெளிக்க சுத்தமான தண்ணீரை உபயோகிக்க வேண்டும். வளர்ச்சிநிலை, பூக்கும் நிலை மற்றும் காய்பிடிக்கும் நிலைகளில் நீர் பாய்ச்சுதல் செய்ய வேண்டும். பயறு வகைகளில் இளம்பருவம், வளரும் பருவம் மற்றும் பூக்கும் பருவங்களில் ஏற்படும் நோய்களையும், சாம்பல் நோய் மற்றும் துருநோய்களுக்கான மருந்துகளை வேளாண்துறையினர் வழிகாட்டு தலிடன் கலந்து தெளிக்க வேண்டும். 80% காய்கள் நன்கு முற்றயவுடன் அறுவடை செய்ய வே ண்டும். பிரித்த விதைகளை நன்கு காயவைக்க வேண்டும். 1 கிலோ விதைக்கு 10 மில்லி என்ற அளவில் ஏதா வது 1 தாவர எண்ணெய்யுடன் கலந்து சேமித்திட வேண்டும். இவ்வாறு செய்வதால் வண்டுகள் பயிரின் மீது முட்டையிடுவதை குறைக்கலாம். இதுதொடர்பான கூடுதல் விபரங்களுக்கு விவசாயிகள் அந்தந்த பகுதியில் வே ளாண் உதவி இயக்குநர் அலுவலகத்தை அணுகலாம் என, பழநி வட்டார வேளாண் உதவி இயக்குநர் சாந்தாமணி தெரிவித்துள்ளார்.

## குண்டு மிளகாய் விதை பிரிக்கும் பணியில் விவசாயிகள் தீவிரம்

இளையான்குடி: சிவகங்கை மற்றும் ராமநாதபுரம் மாவட்டத்தில், காய்ந்த வற்றல் மிளகாயிலிருந்து விதைகளை தனியாக பிரிக்கும் பணியில்

அப்பகுதி விவசாயிகள் தீவிரம் காட்டி வருகின்றனர். சிவகங்கை மாவட்டம் இளையான்குடி தாலுகாவிற்கு உட்பட்ட சாலைக்கிராமம், சூராணம், தாயமங்கலம், திருவுடையார்புரம் ஆகிய வருவாய் பிர்காக்களில் கடந்த ஆண்டு 3,022 ஹெக்டேரிலும், ராமநாதபுரம் மாவட்டம் ஆர்எஸ்.மங்கலம், நயினார்கோயில், முதுகுளத்துர், சாயல்குடி ஆகிய பகுதிகளில் 15 ஆயிரம் ஹெக்டேரில் குண்டு மிளகாய் அதிக அளவில் பயிரிடப்பட்டது. கடந்த ஆண்டு ஜனவரி முதல் மார்ச் வரை ஒரு கிலோ மிளகாய் 100 முதல் 130 வரை விற்பனையானது. நடப்பாண்டில் தற்போது பரவலாக பெய்த மழையால் மிளகாய்செடிகளை பயிரிட ஏற்ற காலநிலை நிலவுகிறது. இதனால் தற்போது சிவகங்கை மற்றும் ராமநாதபுரம் மாவட்ட விவசாயிகள் ஏற்கனவே விதைக்கு வைத்திருந்த வற்றல் மிளகாயை, உடைத்து விதைகளை தனியாக பிரித்து எடுக்கும் பணியில் தீவிரமாக ஈடுபட்டுள்ளனர். ஒரு ஏக்கருக்கு மூன்று படி அளவில் விதை மிளகாய் பிரித்து எ டுக்கின்றனர். மேலும் சில இடங்களில் சரியான மழை இல்லாததால், பிரித்து எடுத்த விதையை தயார் நிலையில் வைத்துள்ளனர். இதுகுறித்து விவசாயி பஞ்சவர்ணம் கூறுகையில், மிளகாய் விதைப்பதற்கு லேசான மழை போதும். மாவட்டத்தில் சில இடங்களில் நல்ல மழையும், சில இடங்களில் மழை இல்லாமலும் உள்ளது. அதனால் மிளகாய் விதைகளை தயார் நிலையில் பிரித்து வைத்துள்ளோம் என்றார்.

## மாவட்டம் முழுவதும் பலத்த மழை போளூரில் 36.8 மி.மீ. பதிவு

திருவண்ணாமலை,: திருவண்ணாமலையில் நேற்று முன்தினம் காலையில் இருந்தே வானம் மேக மூட்டமாக காணப்பட்டது. இடையிடையே வெயில் அடித்தது. இந்த நிலையில் நேற்று இரவு திடீரென கருமேகங்கள் திரண்டு பலத்த மழை பெய்தது. இதனால் பள்ளமான இடங்களில் மழைநீர் தேங்கி நின்றது. இரவில் குளிர்ந்த காற்று வீசியது. இதே போல மாவட்டம் முழுவதும் நேற்று முன்தினம் இரவு நல்ல மழை பெய்துள்ளது. போளூரில் மட்டும் 36.8 மி.மீ. மழை பதிவாகி உள்ளது. மாவட்டத்தில் மற்ற இடங்களில் பெய்த மழை அளவு

வருமாறு:வந்தவாசி-27 மி.மீ.,செங்கம்-23.6 மி.மீ.,ஆரணி-21.8 மி.மீ.,செய்யாறு-16.5 மி.மீ., திருவண்ணாமலை-13.6 மி.மீ.,சாத்தனூர் அணை-5.2மி.மீ. திருவண்ணாமலை,: திருவண்ணாமலையில் நேற்று முன்தினம் காலையில் இருந்தே வானம் மேக மூட்டமாக காணப்பட்டது. இடையிடையே வெயில் அடித்தது. இந்த நிலையில் நேற்று இரவு திடீரென கருமேகங்கள் திரண்டு பலத்த மழை பெய்தது. இதனால் பள்ளமான இடங்களில் மழைநீர் தேங்கி நின்றது. இரவில் குளிர்ந்த காற்று வீசியது. இதே போல மாவட்டம் முழுவதும் நேற்று முன்தினம் இரவு நல்ல மழை பெய்துள்ளது. போளூரில் மட்டும் 36.8 மி.மீ. மழை பதிவாகி உள்ளது. மாவட்டத்தில் மற்ற இடங்களில் பெய்த மழை அளவு வருமாறு: வந்தவாசி-27 மி.மீ.,செங்கம்-23.6 மி.மீ.,ஆரணி-21.8 மி.மீ.,செய்யாறு-16.5 மி.மீ., திருவண்ணாமலை-13.6 மி.மீ.,சாத்தனூர் அணை-5.2மி.மீ.

## <u>திருவண்ணாமலையில் இயற்கை வேளாண்மை கருத்தரங்கம்</u>

திருவண்ணாமலை,: திருவண்ணாமலை கன்னிகாபரமேஸ்வரி கோயிலில் வாழும் கலை யோகா சேவை மையத்தின் சார்பில் இயற்கை வேளாண்மை கருத்தரங்கம் நடைபெற்றது. இதில் வேளாண் விஞ்ஞானி ஆர்.ராஜாமணி கலந்து கொண்டு பயிற்சி அளித்தார். பயிற்சியின் போது இயற்கை உரங்கள், பயிர் வளர்ச்சி ஊக்கிகள், பூச்சி விரட்டிகள் ஆகியவற்றை செலவில்லாத முறையில் வீட்டிலேயே தயாரிக்கும் முறைகள் குறித்தும், வீட்டு மாடியிலேயே சத்தான காய்கறிகள் பயிரிடும் முறைகள் செயல்விளக்கம் செய்து காண்பிக்கப்பட்டது. மேலும் குறைந்த செலவில் அதிக வருமானம் அளிக்கும் உணவுகாளான் வளர்ப்பு குறித்த பயிற்சியும் அளிக்கப்பட்டது. ஏராளமான பொதுமக்கள் கலந்து கொண்டனர். முடிவில் சாதிக் நன்றி கூறினார். இதற்கான ஏற்பாடு களை வாழும் கலை பயிற்சி ஆசிரியர் ஜெ. கோபாலகிருஷ்ணன், ஒருங்கிணைப்பாளர் ப.தமிழ்ச்செல்வன், வனிதா ஆகியோர் செய்திருந்தனர்.

## வெள்ளாடு வளர்ப்பு பயிற்சி முகாம்

சேலம், : சேலத்தில் வெள்ளாடு வளர்ப்பது குறித்த ஒருநாள் பயிற்சி முகாம் நேற்று நடைபெற்றது. சேலத்தில் ஒவ்வொரு மாதமும் கால்நடை பராமரிப்பு துறையின் சார்பாக விவசாயிகளுக்கான வெள்ளாடு, நாட்டுக்கோழி, முயல் உள்ளிட்ட கால்நடைகள் வளர்ப்பது குறித்த பயிற்சி முகாம் நடைபெற்று வருகிறது. அதன்படி வெள்ளாடு மற்றும் நாட்டுக்கோழி வளர்ப்பு குறித்த ஒருநாள் பயிற்சி முகாம் சேலத்தில் உள்ள கால்நடை மருத்துவ பல்கலைக்கழக பயிற்சி மற்றும் ஆராய்ச்சி மையத்தில் நேற்று நடைபெற்றது. முகாமிற்கு கால்நடைத்துறை பேராசிரியர் முருகேசன் தலைமை வகித்தார். உதவி பேராசிரியர் திருநாவுக்கரசு முகாமில் கலந்து கொண்ட விவசாயிகளுக்கு வெள்ள டு மற்றும் நாட்டுகோழி வளர்ப்பது குறித்த முறை களை வழங்கினார். இதில் வெள்ளாடு மற்றும் நாட்டுக்கோழி வளர்ப்பு முறை கள், நோய்தடுப்பு முறைகள், கால்நடைகளுக்கு வழங்கவேண்டிய தீவனங்கள், கால்நடைகளுக்கான கொ ட்டகை அமைப்பு, பராமரிப்பு, இனவிருத்தி உள்ளிட்டவைகள் குறித்து பயிற்சிகள் வழங்கப்பட்டது. இதில் சேலம், தர்மபுரி, கிருஷ்ணகிரி, திருவண்ணா மலை உள்ளிட்ட தமிழகம் முழுவதிலும் இரு ந்து வந்திருந்த ஏராளமான விவசாயிகள் கலந்து கொண்டனர்.

## 19ம் தேதி விவசாயிகள் குறைதீர் கூட்டம்

திருவள்ளூர், : திருவள்ளூர் கலெக்டர் வீரராகவ ராவ் வெளியிட்டுள்ள அறிக்கை: திருவள்ளூர் மாவட்ட விவசாயிகள் குறைதீர்க்கும் நாள் கூட்டம் கலெக்டர் அலுவலக கூட்டரங்கில் வரும் 19ம் தேதி காலை 11 மணிக்கு நடக்கிறது. கலெக்டர் வீரராகவ ராவ் தலைமை வகிக்கிறார். கூட்டத்தில், வேளாண்மை, தோட்டக்கலை, வருவாய், மின்வாரியம், கூட்டுறவு, பொதுப்பணி, வேளாண்மை பொறியியல், மீன்வளம், கால்நடை பராமரிப்பு, வேளாண் விற்பனை மற்றும் வணிகத்துறை மற்றும் இதர வேளாண் சார்ந்த துறை அலுவலர்கள் கலந்துகொண்டு

விவசாயிகளின் குறைகளுக்கு தீர்வு காண உள்ளனர். எனவே, விவசாயிகள் பங்கேற்குமாறு கேட்டுக்கொள்ளப்படுகிறார்கள்.

**நீலகிரி தேயிலை எஸ்டேட்களில் 8 மாதத்தில் உற்பத்தி அதிகரிப்பு**

குன்னூர்: இவ்வாண்டு 8 மாதத்தில் நீலகிரியில் உள்ள பெரிய தேயிலை எஸ்டேட்களின் உற்பத்தி அதிகரித்துள்ளது. நீலகிரி மாவட்டத்தில் இந்தாண்டு ஜனவரி முதல் ஆகஸ்ட் மாதம் வரை முதல் 8 மாதங்களில் பெரிய கம்பெனி எஸ்டேட்களின் தேயிலை தூள் உற்பத்தி அதிகரித்துள்ளது. கடந்தாண்டு 94 லட்சம் கிலோ தேயிலை தூள் உற்பத்தி செய்யப்பட்ட நிலையில் இந்த £ண்டு 1.09 கோடி கிலே £வாக உயர்ந்துள்ளது. கடந்த 5 ஆண்டு சராசரியாக 93 லட்சம் கிலோ மட்டுமே உற்பத்தி மேற்கொள்ளப்பட்டது. இதில் ஆகஸ்ட் மாதம் மட்டும் இதன் உற்பத்தி சற்று உயர்ந்துள்ளது. இதற்கு முக்கிய காரணம் பெரிய தேயிலை எஸ்டேட் நிர்வாகங்கள் சமீபக்கில் பெய்க பரவலான மழையை பயன்படுக்கி முறையாக உரமிட்டும் மருந்து தெளிக்கும் பராமரிக்கு வந்ததால் இந்த நிலை ஏற்பட்டுள்ளதாக உற்பத்தியாளர்கள் கெரிவிக்குள்ளனர். இங்கு, உற்பக்கி செய்யப்படும் பெரும்பாலான தேயிலை தூள் வெளிநாடுகளுக்கு நேரடியாக ஏற்றுமதி செய்யப்படுகிறது. மீதமுள்ள தேயிலை தூள் மட்டும் குன்னூரிலுள்ள ஏல மையங்கள் மூலம் விற்பனையாகிறது. இதனிடையே ஏற்றுமதியில் கடந்த சில வாரங்களாக வெளிநாடுகளில் உள்ள உள்நாட்டு கலவரம், அரசியல் விவகாரம் உள்ளிட்ட பல பிரச்னைக ளால் நேரடி விற்பனையிலும் பாதிப்பு ஏற்பட்டுள்ளது. இதேபோல் ஏல மையங்களிலும் வெளி நாட்டு வர்க்ககர்களின் பங்களிப்பு குறை ந்து வருவதால் தேயிலை தூள் தேக்கமடைவதுடன் அதன் விலையும் சரிந்துள்ளது. இதுபோன்ற சூழ்நிலையில் பெரிய தேயிலை எஸ்டேட் நிர்வாகங்கள் தொழிலாளர்களுக்கு உரிய சலுகைகளை வழங்கி தொடர்ந்து நிர்வாகத்தை நடத்த இயலாமல் அவதியுற்று வருவதாக கூறுகின்றனர். எனவே, நீலகிரியில் இருந்து வெளிநாடுகளுக்கு ஏற்றுமதி செய்யப்படும் தேயிலை தூள்கள் தடையின்றி கொண்டு செல்ல தேயிலை வாரியம் ஒக்குழைக்க வேண்டும் எனவும் உள்நாட்டு வர்க்ககக்கையும் அதிகரிக்க விரைந்து நடவடிக்கை எடுக்க வேண்டும் எனவும் வலியுறுத்தி உள்ளனர்.

**<u>மகசூல் குறைவால் வாரத்தில் 5 நாள் மட்டுமே தேயிலை உற்பத்தி</u>**

குன்னூர், : மாவட்டத்தில் கடந்த 3 வாரங்களாக கோத்தகிரி, குன்னூரை தவிர ஊட்டி கூடலூர், குந்தா ஆகிய பகுதிகளில் மட்டும் அவ்வப்போது பரவலான மழை பெய்தது. இருப்பினும் இந்த மழை தேயிலை விவசாயத்திற்கு ஏற்றதாக இல்லை. பரவலான மழை அவ்வப்போது பெய்ததன் எதிரொலியாக கடந்த மாதம் வரை தேயிலை மகசூல் அதிகரித்தது. தற்போது மழையின் அளவு குறைந்து வெயிலின் தாக்கம் அதிகரிப்பதுடன் சூறாவளி காற்றும் வேகமாக இருப்பதால் தேயிலை செடிகளிலுள்ள அரும்புகள் சேதமடைந்துள்ளன. இதனால் மகசூலின் அளவும் குறைய துவங்கி உள்ளது. கடந்த 1 மாதத்திற்கு முன்பு வரை மகசூல் அதிகரித்ததால் தேயிலை தூளை உற்பத்தி செய்ய இயலாமல் பெரும்பாலான தொழிற்சாலைகள் கோட்டா முறையை அமல்படுத்தின. இந்நிலையில் தற்போது மகசூல் குறைவு காரணமாக வாரத்தில் 4 முதல் 5 நாட்கள் மட்டுமே தேயிலை உற்பத்தி செய்யும் நிலை ஏற்பட்டுள்ளது. இதுபோல் உற்பத்தி குறைந்தாலும் கூட ஏல மையங்களில் எதிர்பார்த்தார் போல் விற்பனையும் விலை யும் கிடைப்பது இல்லை. இதன் காரணமாக குன்னூர் சிடிடிஏ ஏலமையத்தில் வரும் வியாழன் வெள்ளி ஆகிய நாட்களில் நடக்கவுள்ள ஏலத்திற்கு 12.52 லட்சம் கிலோ தேயிலை தூள் விற்பனைக்கு தயாராக உள்ளது. இது இந்தாண்டிலேயே மிகவும் குறைந்த வரத்தா கும். இந்நிலையில், தேயி லை தூளின் விலையை அதிகரிக்க உள்நாட்டு மற்றும் வெளி நாட்டு வர்த்தகம் மேம்பட தேவையான நடவடிக்கையை வரும் காலங்களில் எடுத்தால் மட்டுமே இத்தொழிலை சார்ந்த அனைவரும் பயன்பெறுவார்கள். எனவே, தேயிலை வாரிய மும் ஏல மையங்களும் இணைந்து உரிய நடவடிக்கை எடுக்க வேண்டும் என விவசாயிகள் வலியுறுத்தி உள்ளனர்.

## <u>வெயிலில் வாடும் மக்காச்சோள பயிரை காப்பாற்ற வேளாண் அதிகாரி</u>

## <u>அறிவுறுத்தல்</u>

பெரம்பலூர்: வெயிலில் வாடும் மக்காச்சோள பயிரை காப்பாற்ற, நுண்ணுயிர்க்காரணி தெளிக்க வேண்டுமென வேளாண்மைத்துறை இணை இயக்குநர் அழகிரிசாமி தெரிவித்துள்ளார். இதுதொடர் பாக அவர் வெளியிட்டுள்ள அறிவிப்பில் தெரிவித்திருப்பதாவது :பெரம்பலூர் மாவட்டத்திலுள்ள பெரம்பலூர், வேப்பூர், ஆலத்தூர், வேப்பந்தட்டை ஆகிய நான்கு வட்டாரங்களில் பருத்தி மற்றும் மக்காச்சோளம் விதைப்பு செய் யப்பட்டு, தற்போது 30 முதல் 35 நாட்கள் பயிர்களாக உள்ளது. இந்நிலையில் கடந்த 10, 12 நாட்களுக்கும் மேலாக மழை ஏதும் இல்லாததால் மக்காச்சோளம் பயிர்கள், குறிப்பாக சரளை மண் நிலப்பகுதியில் விதைப்பு செய்யப்பட்ட மக்காச்சோளப் பயிர்கள் வாடும் தருவாயில் உள்ளது. மண்ணில் ஈரப்பதம் குறைந்து கடுமையான வெப்பம் நிலவுவதால் வாடும் தருவாயில் உள்ள பயிர்களுக்கு 200 மி.லி பிபிஎப்எம்நுண்உயிர்க்காரணியை 200 லிட்டர் தண்ணீரில் கலந்து கைத்தெளிப்பான் கொண்டு இலைகள் நன்றாக நனையும்படி காலை வேளையில் தெளிக்கவேண்டும். இதனால் பயிர்கள் வாடும் நிலையிலிருந்து தெளிந்து விடும். இந்த பிபிஎப்எம் நுண்உயிர்க்காரணி வேப்பந்தட்டை பருத்தி ஆராய்ச்சி நிலையத்தில் விநியோகத்திற்கு உள்ளது. இதனை விவசாயிகள் வாங்கித் தெளித்து பயனடையலாம். மேலும் தற்போது நிலவும் தட்ப வெட்ப நிலையில் பருத்தியில் இலைப்பேன் மற்றும் தத்துப்பூச்சி தாக்குதலுக்குள்ளாக வாய்ப்புள்ளது. அதனை கட்டுக்படுத்த தையோ மீத்தாக்சம் (ஆக்ட்ரா) 25 கீநி ஏக்கருக்கு 200 கிராம் (அல்லது) பிப்ரோனில் (ரீஜெண்ட்) 5 ஷிசி ஏக்கருக்கு 600 மி.லி இத்துடன் ஏதாவது ஒரு ஒட்டும் திரவம் (5 மி. லிடேங்க் ) வயலில் தேவையான அளவு ஈரப்பதம் இருக்கும்போது தெளித்து கட்டுப் படுத்தலாம் என பெரம்பலூர் மாவட்ட வேளாண்மைத்துறை இணை இயக்குநர் அழகிரிசாமி தெரிவித்துள்ளார்.

**பருத்தி ஏலம்**

பாபநாசம்: பாபநாசம் ஒழுங்குமுறை விற்பனை கூடத்தில் பருத்தி ஏலம் நடந்தது. திருக்களஞ்சேரி, மெலட்டூர், களஞ்சேரி, பாபநாசம், திருப்பாலத்துறை, தெற்கு நாயக்கன் பேட்டை, ஆலத்தூர், கபிஸ்தலம், உத்தமதானபுரம், கோட்டைச்சேரி, மாலாபுரம், கோபுராஜபுரம், வீரமாங்குடி, பெருமாங்குடி உள்ளிட்ட பகுதிகளிலிருந்து 71 விவசாயிகள் பங்கேற்றனர். கும்பகோணத்திலிருந்து 2 வணிகர்கள் கலந்து கொண் டனர். கண்காணிப்பு பொறுப்பாளர் தாட்சாயினி, இளநிலை உதவியாளர் செந்தில்நாதன் முன்னிலையில் ஏலம் நடந்தது. பருத்தி குவிண்டால் அதிகப்பட்சமாக ரூ.4,489, குறைந்தப்பட்சமாக ரூ.3,209, சராசரியாக ரூ.4,187க்கு ஏலம் போனது.

**தென்னை நார்க்கழிவில் கம்போஸ்ட் தயாரிக்கும் முறை விவசாயிகளுக்கு விளக்கம்**

பட்டுக்கோட்டை: பட்டுக்கோட்டை, திருவோணம் வட்டார சாலையோரங்களில் ஆங்காங்கே கிடக்கும் தென்னை நார்கழிவுகளை பயன்படுத்தி கம்போஸ்ட் உரம் தயாரிக்கலாம் என்று விவசாயிகளுக்கு விளக்கம் அளிக்கப்பட்டுள்ளது. இதுகுறித்து வேளாண்மை உதவி இயக்குனர் மதியரசன் வெளியிட்டுள்ள அறிக்கை: பட்டுக்கோட்டை, திருவோணம் வட்டாரங்களில் சாலையோரங்களில் ஆங்காங்கே தென்னை நார்கழிவுகள் பயன்பாடின்றி குவியல் குவியலாக குவித்து வைக்கப்பட்டுள்ளது. இதை மக்க செய்து கம்போஸ்ட் உரங்களாக பயன்படுத்தலாம். இதற்கு தென்னை நார்கழிவு 1 டன், புளூரோட்டஸ் காளான்வித்து 1 கிலோ, யூரியா 5 கிலோ வேண்டும். முதலில் 100 கிலோ தென்னை நார்கழிவை 5 மீட்டர் இன்ட் 3 மீட்டர் நீள, அகலமுடைய மேடான நிலப்பரப்பில் சமமாக பரப்ப வேண்டும். (சராசரியாக 4 முழுச்சாக்கு கொள்ளளவு கொண்டது). பின்னர் அதன்மேல் 200 கிராம் புளூரோட்டஸ் காளான் வித்துக்களை பரப்ப வேண்டும். அதன்மேல் தண்ணீர் தெளித்து 100 கிலோ தென்னை

நார்கழிவை பரப்பி ஒரு கிலோ யூரியாவை சீராக தூவ வேண்டும். மீண்டும் அதன்மேல் நன்கு தண்ணீர் தெளிக்க வேண்டும். இதேபோல் நார்கழிவு, புளூரோட்டஸ் காளான்வித்து மற்றும் யூரியாவை 10 அடுக்குகள் வரும்வரை மாற்றி மாற்றி அடுக்கி (ஒரு மீட்டர் உயரம் வரை) ஈரம் காயாதவாறு தினமும் தண்ணீர் தெளித்து வரவேண்டும். 30 நாட்களுக்கு பிறகு இந்த கழிவானது கருப்பு நிறத்தில் மாறும். இதுவே கம்போஸ்ட் உரமாக பயிர்களுக்கு பயன்படுத்தக்கூடிய மிகச்சரியான தருணமாகும். தென்னை நார்கழிவு கம்போஸ்ட் உரக்கால் தென்னை நார்கழிவில் உள்ள நார் பொருட்கள் சிதைக்கப்பட்டு எளிதில் பயிருக்கு கிடைக்கும் சத்தாக மாறுகிறது. கரிமம், நைட்ரஜன் ஆகியவற்றின் விகிதாச்சாரம் 112:1 லிருந்து 21:1 என்ற அளவுக்கு குறைக்கப்படுகிறது. இதனால் நைட்ரஜன் சத்து வீணா வது குறைந்து பயிருக்கு பெருமளவில் கிடைக்கிறது. தழைச்சத்தின் அளவு 0.26 சதத்திலிருந்து 1.06 சதமாக அதிகரிக்கிறது. மக்கிய கம்போஸ்டில் நுண்சத்துக்கள், முதன்மை சத்துக்கள் மற்றும் இரண்டாம் நிலை சத்துக்கள் அளவு அதிகமாக இருக்கும். இக்கம்போஸ்ட் உரமானது மானாவாரி நிலங்களுக்கும், களர் உவர் நிலங்களுக்கும் பயனுள்ளதாக இருக்கும். மண்ணின் பவுதீக மற்றும் வேதியியல் தன்மைகளை பாதுகாக்கிறது. இந்த உரமானது நிலத்துக்கு சத்துக்கள் அளிப்பதுடன் மண்ணின் நீர்பிடிப்பு திறனை அதிகரிக்க செய்கிறது. ஒரு ஏக்கருக்கு சாதாரணமாக 5 டன் தொழு உரம் இடும் இடத்தில் இக்கம்போஸ்ட் உரத்தை 3 டன் இட்டாலே தொழு உரத்துக்கு இணை யான மகசூலும், விளைபொருட்களின் தரமும், மண்ணின் வளமும் பாதுகாக்கப்படுவதுடன் சுற்றுச்சூழல் கேடும் தவிர்க்கப்படுகிறது. எனவே விவசாயிகள் தென்னை நார்கழிவு கம் போஸ்ட் உரம் தயாரித்து பயிர்களுக்கு இட்டு அதிக பலனை பெறலாம்.

## <u>விவசாயிகளுக்கு பழக்கன்றுகள் விநியோகம்</u>

ராமநாதபுரம்: ராமநாதபுரம் மாவட்ட நீர்வடிப்பகுதி மேம்பாட்டு முகமை மூலம் ஆர்.எஸ்.மங்கலம் அருகே கொத்தியார்கோட்டை கிராமத்தில் பயனாளிகளுக்கு பழக்கன்றுகள் வழங்கும் விழா நடந்தது. கிட்ட அலுவலர் கிருஷ்ணமூர்த்தி பழக்கன்றுகளை வழங்கி திட்டத்தை

தொடங்கி வைத்தார். கலெக்டரின் நேர்முக உதவியாளர் (வேளாண்மை) கனகராஜன், அங்குள்ள தொடக்கப் பள்ளி வளாகத்தில் பழக்கன்றுகளை நட்டார். பழக்கன்றுகளை வீட்டுத் தோட்டத்தில் நடவு செய்து பராமரிக்கும் முறை குறித்து செயல் விளக்கம் அளிக்கப்பட்டது. நிகழ்ச்சி ஏற்பாடுகளை நீர்வடிப்பகுதி மேம்பாட்டு அணி உறுப்பினர் தீனதயாளன் உள்ளிட்டோர் செய்திருந்தனர்.

## <u>மிளகாய் விதைப்பிற்கு ஆயத்தமாகும் விவசாயிகள் விதை பிரிப்பு பணி தீவிரம்</u>

இளையான்குடி: ராமநாதபுரம் மற்றும் சிவக ங்கை மாவட்டங்களில், மிள காய் விதைப்பிற்கு விவசாயிகள் ஆயத்தமாகி வருகின்றனர். காய்ந்த வற்றல் மிளகாயிலிருந்து விதைகளை பிரிக்கும் பணி யில் தீவிரம் காட்டி வருகின்றனர். சிவகங்கை மாவட்டம் இளையான்குடி தாலுகாவிற்கு உட்பட்ட சாலைக்கிராமம், சூராணம், தாயமங்கலம், திருவுடையார்புரம் ஆகிய வருவாய் பிர்காக்களில் கடந்த ஆண்டு 3 ஆயிரத்து 22 ஹெக்டேரி லும், ராமநாதபுரம் மாவட்டத்தில் ஆர்.எஸ்.மங்கலம், நயினார்கோயில், முதுகுளத்தூர், சாயல்குடி ஆகிய பகுதிகளில் 15 ஆயிரம் ஹெக்டேரிலும் குண்டு மிளகாய் அதிக அளவில் பயிரிடப்பட்டது. கடந்த ஆண்டு ஜனவரி முதல் மார்ச் வரை ஒரு கிலோ மிளகாய் ரூ.100 முதல் ரூ.130 வரை விற்பனையானது. நடப்பாண்டில் தற் போது பரவலாக பெய்த மழையால் மிளகாய் செடிகளை பயிரிட ஏற்ற காலநிலை நிலவுகிறது. இதனால் தற்போது சிவகங் கை மற்றும் ராமநாதபுரம் மாவட்டங்களை சேர்ந்த விவசாயிகள் ஏற்கனவே விதைக்கு வைத்திருந்த வற்றல் மிளகாயை, உடைத்து விதைகளை தனியாக பிரித்து எடுக்கும் பணியில் தீவிரம் காட்டி வருகின்றனர். ஒரு ஏக்கருக்கு மூன்று படி என்ற அளவுக்கு மிள காய் விதை பிரித்து எடுத்து வருகின்றனர். மேலும் சில இடங்களில் சரியான மழை இல்லாததால், பிரித்து எடுத்த விதையை தயார் நிலையில் வைத்துள்ளனர்.இதுகுறித்து விவசாயி பஞ்சவர்ணம் கூறுகையில், `மிளகாய் விதைப்பதற்கு குறைந்தளவு மழை பெய் தால் போதும்.

மாவட்டத் தில் சில இடங்களில் நல்ல மழை பெய்துள்ளது. சில இடங்களில் மழை பெய்யவில்லை. இருந்தபோதும், மிளகாய் விதைகளை விதைப்பதற்கு தயார் நிலையில் பிரித்து வைத்துள்ளோம் என்றார்.

**இன்றைய வேளாண் செய்திகள்**

**<u>மு.வேலாயும்பாளையம் அரசு பள்ளியில் ஒரு செடியில் 40 கிலோ எடை கொண்ட மரவள்ளி கிழங்கு</u>**



முத்தூர் அருகே மு.வேலாயும்பாளையம் அரசு ஆரம்ப பள்ளியில் ஒரு செடியில் 40 கிலோ எடை கொண்ட மரவள்ளி கிழங்கு உருவாகியுள்ளது.

<u>மரவள்ளி கிழங்கு செடி</u>

திருப்பூர் மாவட்டம் முத்தூர் அருகே மு.வேலாயுதம்பாளையத்தில் அரசு ஆரம்ப பள்ளி செயல்பட்டு வருகிறது. இந்த பள்ளியில் பயிலும் மாணவ–மாணவிகள் கடந்த 20 மாதங்களுக்கு முன்பு கரூரில் இருந்து கொண்டு வரப்பட்ட மரவள்ளி கிழங்கு குச்சியை பள்ளி வளாகத்தில் ஊன்றி வைத்து தினமும் நீர் பாய்ச்சி வந்தனர். இந்த மரவள்ளி கிழங்கு செடி சுமார் 7 அடிக்கு மேல் நன்கு வளர்ந்து விட்டது.

<u>40 கிலோ எடை கொண்ட மரவள்ளி கிழங்கு</u>

இந்த நிலையில் பள்ளியின் தலைமை ஆசிரியை சாந்தி மற்றும் ஆசிரிய–ஆசிரியைகள் இந்த மரவள்ளிகிழங்கு செடியை வெட்டிவிட்டு அடியில் தோண்டி பார்த்தபோது மரவள்ளி கிழங்கு நீண்டதாகவும், உருண்டையாகவும் மிகப்பெரிய ராட்சத அளவில் பெரிய கிழங்காக இருந்ததை கண்டு மிகுந்த ஆச்சரியம் அடைந்தனர். இதுபற்றி தகவல் அறிந்த பள்ளியில் பயிலும் மாணவ–மாணவிகள், பெற்றோர்கள், சுற்றுவட்டார பொதுமக்கள் நேரில் வந்து இந்த பெரிய மரவள்ளி கிழங்கை ஆச்சரியத்துடன் பார்த்து வியந்தனர். இந்த மரவள்ளி கிழங்கு சுமார் 40 கிலோ வரை எடை கொண்டதாக உள்ளது.

<u>ஆச்சரியம் அளிக்கிறது</u>

இதுபற்றி வேளாண்மைத்துறை அதிகாரிகளிடம் கேட்ட போது அவர்கள் கூறியதாவது:– மரவள்ளிகிழங்கு கிழங்கு வகையை சேர்ந்ததாகும். இந்தியாவில் மரவள்ளிகிழங்கு நேரடியாக வேகவைத்த உணவுப்பொருளாகவும், ஜவ்வரிசி, பாயாசம், சிப்ஸ் மூலப்பொருட்கள் தயாரிப்பதற்கும் பயன்பட்டு வருகிறது. மரவள்ளி கிழங்கு இனிப்பு மற்றும் கசப்பு ஆகிய 2 வகைகளில் உள்ளது. மரவள்ளி கிழங்கின் உள்ளே இறுகிய நிலையில் வெண்மை நிறத்தில் மாவுப்பொருள் உள்ளது. மரவள்ளி கிழங்கு கால்நடை தீவனம், ஆல்கஹால் தயாரிப்பதற்கு உபரி மூலப்பொருளாக பயன்படுகிறது. மரவள்ளி கிழங்கு செடி 1 வருட பயிராகும். சாதாரணமாக மரவள்ளி கிழங்கு செடியை அறுவடை செய்யும்போது கிழங்கு ஒன்று 1 கிலோ முதல் 10 கிலோ வரை மட்டுமே எடை கொண்டதாக இருக்கும். இந்த அரசு பள்ளியில் ஒரு செடியில் உருவான மரவள்ளிகிழங்கு மிகப்பெரிய அளவில் அதிக எடை கொண்டதாக உருவாகியுள்ளது மிகுந்த ஆச்சரியம் அளிக்கிறது.

இவ்வாறு அவர்கள் கூறினார்கள்.

**<u>மாவட்டம் முழுவதும் இடி, மின்னலுடன் கன மழை</u>**



விழுப்புரம் மாவட்டம் முழுவதும் இடி, மின்னலுடன் கன மழை பெய்தது. இதில் அதிகபட்சமாக செஞ்சியில் 57 மில்லிமீட்டர் மழை பதிவானது.

வெப்பச்சலனம்

விழுப்புரத்தில் கடந்த சில நாட்களாக மிதமான மழை பெய்து வருகின்றது. இந்நிலையில், வெப்பசலனம் காரணமாக கடலோர மாவட்டங்களில் மழை பெய்யும் என வானிலை மையம் அறிவித்திருந்தது. அதன்படி நேற்று முன்தினம் இரவு விழுப்புரம் மாவட்டத்தில் பல்வேறு பகுதிகளில் கனமழை பெய்தது. விழுப்புரத்தில் நேற்று முன்தினம் காலை முதல் மாலை வரையிலும் வானம் மழைக்கான அறிகுறி எதுவும் இன்றி தெளிவாக காணப்பட்டது. பின்னர் மாலை 7 மணி அளவில் பலத்த காற்று வீசியது. அதனை தொடர்ந்து லேசான மழை பெய்தது. தொடர்ந்து இடி-மின்னலுடன் கன மழை கொட்டியது. திடீர் மழையை எதிர்பார்க்காத சிலர் ஒதுங்க இடமின்றி நனைந்தபடிசென்றதை காணமுடிந்தது. தாழ்வான சாலைகளில் மழை நீர் தேங்கியது. இதனால் பிரதான சாலைகளில் வழக்கமாக செல்வதை காட்டிலும் வாகனங்கள் மிதமான வேகத்திலேயே சென்றது.